...istered as a NewsPaper

விலை ரூபா : 8.00

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

...ங்கள்-12

...ம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-18 01-05-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 72



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

(சி-11481)

# ...தேசியத் தலைவர் அமரர் சிவராமிற்கு

# ...மாமனிதர் விருது வழங்கிக்கௌரவம்!

## ...னப்பற்றிற்கும் விடுதலைப்பற்றிற்குமான ...ற்பணிகளைப் பாராட்டி வழங்கப்பட்டது



(நமது நிருபர்)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் திரு.தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இனப்பற்றிற்கும். விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினால் மாமனிதர் என்ற அதியுயர் தேசியவிருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.



...து குறித்து தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ...ள் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்; ...ழ் மண்ணையும், தமிழ் மக்களையும் ஆழமாக ... ஒரு உயர்ந்த மனிதரை தமிழர் தேசம் இன்று ...விட்டது. தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும், தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஓங்கி ஒலித்த ஒரு உரிமைக் குரல் இன்று ஓய்ந்து விட்டது. எதிரியின் கோழைத்தனமான தாக்குதலுக்கு ஒரு தலை சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் பலியாகிவிட்டார்.

தர்மரட்ணம் சிவராம் (12ஆம் பக்கம் பார்க்க)

## ...மின் படுகொலை ஐ.ம.சு முன்னணி அரசு ...டகவியலாளருக்கு விடுக்கும் எச்சரிக்கையே

### -ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

...டகவியலாளர்களுக்கு எச் ...க விடும் முகமாகவே ஐக் ...க்கள் சுதந்திர முன்னணி அர ...ம் ஊடகவியலாளர் சிவ ... கொலை செய்திருப்பதாக ... கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெலிகம லில் வைத்து ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்த அவர் சிவராமின் சில கருத்துக்களுடன் தனக்கு இணக்கம் இல்லை என்ற போதும் கருத்துச் சுதந்திரம் என்பது அனைவருக்கும் உள்ள தாகத் தெரிவித்த அவர் இந்தக் கொலையானது ஊடக சுதந்திரத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ...இந்திய வெளிநாட்டமைச்சின் செயலர் ...மலையில் கடற்படைத் தளபதியுடன் பேச்சு

(கொழும்பு)

...ந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான செயலாளர் ...ம் சரண் நேற்றுத் திருமலை சென்றுள்ளார். அங்கு அமைந்துள்ள ...ழில் நுட்ப கல்லூரிக்கு உதவிவழங்கும் நிகழ்வை ...யோகபூர்வமாக ஆரம்பித்துவைத்துள்ளார். அதன்பின் ...லையில் அமைந்துள்ள கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று ...ழக்கு பிராந்தியத்துக்குப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் பூதவுல் இன்று ...க்களப்பிற்கு எடுத்துச் செல்லப்படும்

(கொழும்பு)

...கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் பூதவுடல் ...து அவரது கொழும்பு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்று ... இவரது பூதவுடல் சொந்த ஊரான மட்டக்களப்பிற்கு கொண்டு ...ப்படவுள்ளது. நாளை ஆலையடிச் சோலை மயானத்தில் இறுதிக் ...பகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கூடாது

## மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்கர்களை தேசிய பிக்கு முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய பிக்கு முன்னணி நேற்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகா நாயக்கர்களை சந்தித்தனர். இதன்போது சுனாமியின் பின்னர் அரசாங் கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் அமைக்க உத்தேசித்துள்ள பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படக்கூடாது எனத் தாம் வலியுறுத்தியதாக தேசிய முன்னணி தெரிவித்துள்ளது. இதற்குப் பதிலளித்த மகாநாயக்கர்கள் இது தொடர்பில் தாம் சனாதிபதியிடம் அறிக்கை ஒன்றை வழங்க வுள்ளதாக உறுதியளித்ததாகவும் தேசிய பிக்குமார் முன்னணி தெரிவித் துள்ளது. (32)

## மேலும் இரு முதலமைச்சர்களுக்கு எதிராக ஐ.தே.கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாண சபைகளின் முதலமைச்சர் களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரவுள்ளது. இதற்கு ஜே.வி.பியின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இதற்கான முனைப்புகளை மேற்கொள்ளுமாறு கட்சியின் தலைமை குறிப்பிட்ட மாகாண சபைகளின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது வடமேல் மாகாண முதலமைச்சராக அத்துல ஜெயசிங்கவும் சப்ரகமுவ முதல மைச்சராக மஹிபால ஹேரத்தும் பணியாற்றி வருகிறார்கள். ஏற்கனவே மேல் மாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின்னர் சபை அமர்வுகளை ஆளுநர் அலவி மௌலானா மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது (32).

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் பங்கேற்ற நிகழ்வை திருமலை மாணவர் புறக்கணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை தொழில்நுட் பக் கல்லூரியில் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சின் செய லாளர் ஷியாம் சரண் பங்கு பற்றிய நிகழ்வைக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரித்தனர்.

பகிஷ்கரிப்பில் இனமத பேத வேறுபாடின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பங்கு பற்றினர்.

நிகழ்வுக்கு விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினரை அழைக்காததைக் கண்டித்தே இப்பகிஷ்கரிப்பு மேற் கொள்ளப்பட்டதாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவ வட்டாரங்கள் தெரிவித்தன.

காலை 11.00 மணியளவில் கல்லூரிக்கு இந்திய வெளியுறவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தில் மாவட்ட ரீதியாக

## இன்று 'மே' நாள் நிகழ்வுகள் !

(நமது நிருபர்)

தமிழீழப் பிரதேசமெங்கும் மே நாள் நிகழ்வுகள் வெகு சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பொது அமைப்புக்களும், தேசிய எழுச்சிப் பேரவையினரும் மாவட்ட ரீதியில் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

பேரணிகளுடன் பொதுக்கூட்டங்கள் இடம் பெற வுள்ளது.

தமிழீழ தேசியத் தலைமையின் கரத்தைப் பலப் படுத்துதல், தமிழரின் உரிமைக்குரலை ஓங்கி ஒலித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்தல, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட விடயங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்) ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B),

(சி.11779)

### தவறிவிட்டது

முரசு மோட்டையைச் சேர்ந்த பரமசிவம் உதயனன் என்பவரின் அடையாள அட்டை (இல743443691 V) மத்திய கல்லூரி மைதானத்தில் 29.04.05 பிற்பகல் 3 மணிக்கு தொலைந்து விட்டது. இதை எடுத்த வர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது அபி போட்டோ புன்னை நீராவி என்ற விலாசத்தக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (6093)

### தவறிவிட்டது

மார்க்கண்டு கலைச்செல்வன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல (730994559 V) நிரந்தர பயண அனுமதி அட்டைவேலைத் தள அனுமதி அட்டை ஆகியன 27.04.2005 கல்விளானுக்கும் மாங் குளத்துக்கும் இடையில் தவறி விட்டது. இதனை கண்டெடுத்தவர் கள் சுகாதார வைத்தியதிகாரி பணி மனை மல்லாவியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4149)


# ஊடகப்போராளியான சிவராமினை மனிதத்தின் எதிரிகள் கொன்று விட்டனர்

**-யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்-**

(யாழ்ப்பாணம்)

உண்மைகளை எடுத்துரைப் பதற்கேயான துணிச்சல் மட்டுமல் லாது ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனத்தின் மனித உரிமைகளை மீட்பதற்கான ஊடகப்போராளியாக, கருத்து வெளிப்பாடுகளை மேற் கொண்ட ஒரு உன்னத மனிதனான டி.சிவராமினை கோழைத்தனமாக மனிதத்தின் எதிரிகள்கொன்று விட் டனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரி வித்துள்ளது.

பிரபல இராணுவ ஆய்வா ளரும் ஊடகவியலாளருமான டி.சிவராம் படுகொலை செய்யப்பட டதைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது;

தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்யும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் அதன் ஏவலா ளர்களினதும் அடாவடித்தனம் தொடர்கதையாகிவிட்டது. இக் கொடூர செயற்பாடுகள் முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டியவை.

அனைத்துலகத்திலும் செல் வாக்குச்சரிவைக் கண்டு வரும் சிறிலங்கா அரசாங்கமே இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்க வேண் டும் இப்படுகொலை மூலம் அனைத் துலக அரங்குகளில் காலடி எடுத்து வைப்பதற்கு அருகதை இழந்து விட்டது. சிறிலங்கா அரசாங்கம்.

மனித உரிமைகளில் முக்கியத் துவம் பெறுகின்ற கருத்து வெளிப் பாட்டு சுதந்திரத்தை நசுக்கிவிட முயலும் கீழ்த்தரமான தந்திரோ பாயங்களை சிறிலங்கா அரசும் அதன் படைத்தரப்பும் இராணுவ துணைக்குழுவும் மேற்கொள்கின் றது என்பது இக்கொலை மூலம் புலனாகின்றது. சிறிலங்கா அரசாங் கத்தின் கோர முகத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொள்வதுடன் கண் டிக்கவும் வேண்டுமென எதிர்பார்க் கின்றோம் என அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# இன்று முன்னெடுக்கப்படவுள்ள மே நாள்; தமிழ்த்தேசிய வெளிப்பாட்டை முன்நிறுத்தும்

## யாழ்.விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய உழைப்பாளர் உரிமை உயர ஒருங்கிணைவோம் என்ற தொனிப்பொருளில் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்பட வுள்ள இன்றைய மே நாளானது தமிழ்த்தேசியத்தின் வெளிப் பாட்டினை முன்நிறுத்தவுள்ளதென யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, தமிழ் தேசியத்தின் பலத்தை வெளிக்காட்டுவதற்கு மக்கள் அனைவரும் திரண்டு இதில் கலந்துகொள்ள வேண்டி யது தார்மீக கடமையாகும்.

பல நோக்குக் கூட்டுறவுச்சங் கங்கள், பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்கள், கடற்றொழி லாளர் கூட்டுறவுச்சங்கங்கள், ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத் தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு எமது உரிமையை உலகிற்கு உணர்த்துவோமென அவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# உடையார்கட்டில் சிறுவீதிகளை புனரமைக்கும்படி கோரிக்கை

(நமதுநிருபர்)

உடையார்கட்டு தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள சிறுவீதி கள் கடந்த பலவருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதிகளினூடாகப் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்வீதி புனரமைப்புக் குறித்து சம் பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வீதிகளை புனரமைக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொடிகாமம்-கடற்கரை சாலையை புனரமைக்கும்படி கோரிக்கை

(தென்மராட்சி)

கொடிகாமம்கடற்கரைசாலையை புனரமைத்து தரும்படி இப்பகுதி யிலுள்ள ஆறுகிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாரியகுன்றும் குழியுமாக இச் சாலை உள்ளதுடன் மழைகாலங்க ளில் இப்பாதையை பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கின் றது. பாரிய குழிகளுடன் சாலை கள் இருப்பதால் மழை நீர் முழங் காலுக்கு மேல் தேங்கி விடுகின் றது. இதனால் இக்கிராமங்க ளிலுள்ள பொது மக்கள் மற்றும் மாணவர்கள் போக்குவரத்து செய் வதில் பாரிய சிக்கலை எதிர் நோக்குகின்றனர்.

இதனைச் சம்பந்தப்பட்டவர் கள் கவனத்தில் எடுத்துவரும் மழை காலத்திற்கு முன்னராக இச்சாலை களை புனரமைத்து தரும்படி ஆறு கிராமமக்களின் சார்பில் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (28)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 . 09 . 1982

வீரச்சாவு 01 . 05 . 2001

**அச்சுதன் (வாகிசன்)**

**விஜயகுமார்**

சொ.மு: யாழ்ப்பாணம், கொக்குவில்
த.மு: விஜிவீதி, முழங்காவில் (வன்னி)

தலைவன் வழியில் தடம் பதித்து
ஈழவிடுதலைக்காய் விதையான-உன்
கனவு நனவாகும்
தூரம் அதிகமில்லை.

*உன் நினைவுடன்*
*குடும்பத்தினர்*

(சி.11852)


# கௌதாரிமுனைப் பிரதேசத்தில் கடல் உணவு பதனிடல் பயிற்சி வகுப்பு

கௌதாரிமுனைக் கிராமத்தில் ஐ.எல்.ஓ நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத் தினால் நடைமுறைப்படுத்தப்படும் கடல் உணவு பதனிடலும், பொதி செய்தலும், தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் மண் ணித்தலை கடற்றொழிலாளர் இளைப்பாறும் மண்டபத்தில் பொருண்மிய மதியுரையக கிளி நொச்சி மாவட்ட வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம் தலை மையில் நடைபெற்றது.

இப்பயிற்சித் திட்டமானது ஏனைய திட்ட நடைமுறைக் கிராமங்களான புலோப்பளை, மாசார்,உருத்திரீஸ்வரபுரம், பரமன் கிராய் ஆகிய கிராமங்களில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட் டது போன்றே பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக் கொண்ட பத்துப் பயனாளிகளையும், யுத்தம் காரணமாக கல்வியில் நின்று இடைவிலகிய பத்துப் பயனாளி களையும், உள்ளடக்கி ஆரம்பிக் கப்பட்டதோடு பயிற்சியின் முடிவில் இவர்களது குடும்பங்க ளுக்கு வருமான அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய திட்டமாகவும் அமைந்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் பொருண்மிய மதியுரையகத்தின் மாவட்ட வெளிக்கள அலுவலரால் பொருண்மிய மதியுரையக செயற்பாடுகள் தொடர்பாகவும், நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், இதன் மூலம் எதிர்காலத்தில் இக்கிராமத் தில் ஏற்பட இருக்கும் அபிவிருத் திகள் தொடர்பாகவும், விளக்க மளிக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பிரதேச மீனி யல் தொடர்பான போதனாசிரியர் மிரண்டாவினால் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் இப் பிரதேசத்தில் பெரு மளவான நண்டு இறால், கண வாய் ஏனைய மீன்களைச் சந்தைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் தொடர்பாகவும், இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டது தற்போது நடை முறைப்படுத்தப்படவுள்ள கடல் உணவு பதப்படுத்தலும், பொதி செய்தலும் தொடர்பான பயிற்சி மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று முடிவு செய்யப்பட்டது.

இதில் பயனாளிகள் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் ஆகி யோருடன் பெருமளவான மக்க ளும் கலந்து கொண்டனர்.

# புதுமுறிப்பில் வயல் விழா

(நமதுநிருபர்)

ஆராய்ச்சி அனுசரணை இனத் தேர்வுத் துண்டம் மூலம் உப உணவுப் பயிர்ச்செய்கையும் அறுவடைக்குமான வயல் விழா உருத்திரபுரம் விவசாய போதனா சிரியர் பிரிவுக்குட்பட்ட புது முறிப்புப் பகுதியில் கடந்த வியாழனன்று சிறப்புற நடை பெற்றது.

முன்னோடி விவசாயியான ராஜகோபாலின் மேட்டு நிலத்தில் மேற்படி அறுவடை நிகழ்வு இடம் பெற்றது. இதில் இரண்டு மாதங்களில் பயன் தரக்கூடிய உழுந்துவகைகள் 'ஆராய்ச்சி அனுசரணை துண்டங்கள் மூலம் அறுவடை செய்யப்பட்டது. இதனை விட மேற்படி முறையை கையாண்டு பயனடையும் வகையில் நிலக்கடலை, புதிய ஆரி பயறு, டவள கௌப்பி இனமும் அப்பகுதி விவசாயிக ளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிமாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராஜா பாடவிதான உத்தியோகத்தர்கள் விவசாயப் போதனாசிரியர்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் முன்னோடி விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப் பித்தனர்.

மேற்படி பயிர்ச்செய்கை முறை உருத்திரபுரம் விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங் கத்தால் நடைமுறைப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.


## முல்லை வர்த்தக சங்க அறிவித்தல்

முல்லை வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 02.05.2005 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு றோ.க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள் ளப்படுகிறீர்கள்.

தகவல்:
ப. அறிவழகன்,
செயலாளர்,
முல்லை வர்த்தக சங்கம்,
முல்லைத்தீவு.

(6094)

# ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு; 50 பேர் பலி; 200பேர் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கின் பல நகரங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை இடம்பெற்ற தொடர்ச்சியான கார்க்குண்டுத் தாக்குதல்களில் பலியானோர் எண்ணிக்கை 50ஆக உயர்ந்துள்ளது. 200 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

ஈராக்கில் இப்ராகிம் ஜபாரி தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்ற அடுத்த நாளான நேற்று முன்தினம் பல்வேறு இடங்களில் கார்க் குண்டுகள் வெடித்தன. பாக்தாத், தியாரா, மதய்யா அகாமியா உட்பட 13 இடங்களில் கார்க் குண்டுகள் வெடித்தன. இதில் பலியானவர்கள் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலியானவர்களில் ஆறு பேர் அமெரிக்க இராணுவத்தினர் எனவும் ஈராக்கில் தீவிரவாதிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்திய தாக்குதலில் இதுவரை 1200 அமெரிக்க வீரர்கள் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் இன்னும் நீடிக்கும். அமெரிக்க அதிபர் புஷ்சை நிம்மதியுடன் இருக்க விடமாட்டோம். என்று அல்-ஹெய்தா தீவிர வாத இயக்கத்தினர் ஈராக் தளபதி ஒருவரின் இணைய தளம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



ஈராக் குண்டு வெடிப்பில் எரிந்து கொண்டிருக்கும் கார் ஒன்றையும், குண்டு வெடிப்பில் பலியானவரை அடையாளம் காணும் உறவினர் ஒருவரையும் படத்தில் காணலாம்.

## புட்டின் அஞ்சலி



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் ரமலா நகரின் மேற்குக் கரைப் பகுதியில் மறைந்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் நினைவிடத்திற்கு, சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ரஷ்ய அதிபர் ஒருவர் பலஸ்தீனம் சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

# ஒசாமா பின்லேடன் இறந்துவிட்டார் மறுக்கிறது இஸ்லாமிய இணையதளம்

(இஸ்லாமாபாத்)

அல்-ஹைய்தா இயக்கத்தின் தலைவராக ஒசாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என்று இஸ்லாமிய இணையதளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள 110 மாடி இரட்டைக் கோபுர தகர்ப்புக்கு காரணம் எனக் கருதப்படும் அல்-ஹைய்தா இயக்கத் தின் தலைவரான ஒசாமா பின் லேடன் தற்போது எங்கே பதுங்கியிருக்கின்றார் என்பது மர்மமாக உள்ளது.

2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படை எடுத்த போது பின்லேடன். ரகசியமாக பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்று விட்டதாக ஜேர்மனி நாட்டு உளவுப் படையைச் சேர்ந்த அதிகாரி ஆகஸ்ட் ஹானிங் என்பவர் தகவல் தெரிவித்திருந்தார். பின்லேடன் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தான் தங்கியிருப்பதை அவர் கூறியிருந்தாப். பின்லேடன் ஆப்கானிஸ்தானுக்கும்-பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள மலைகள் நிறைந்த எல்லைப் பகுதியில் தான் பதுங்கியிருப்பதாக அவர் கூறியிருந்தார். இன்னும் அப் பகுதியிலேயே வாழ்வதாக மேற்கு நாட்டு உளவு அமைப்புக்கள் கருதுகின்றன.

பின்லேடனை தேடிப்பிடிக்கும் வேளையில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியாக செயல்படும் பாக்.. சனாதிபதி முஷாரப் கூட பின்லேடன் நிலை குறித்து அண்மையில் பி.பி.சி. தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்திருந்தார். அதில் பின்லேடன் ஆப்கான்-பாக். எல்லைப்பகுதியில் பதுங்கியிருக்க வாய்ப்புள்ளது. பின்லேடனை பிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என குறிப்பிட்டு இருந்தார்..

இந்த நிலையில் இஸ்லாமிய இணையதளம் ஒன்று பின்லேடன் பற்றி தற்போது புதிய செய்தி வெளியிட்டு பரபரப்பை கிளப்பியிருக்கிறது.

அந்த இணையதளத்தில் - பின்லேடன்இறந்து விட்டதாக கூறுவது தவறு. அவர் இன்னும் இறக்க



வில்லை. ஆனால் அவர் விரைவில் இறக்கப்போகிறார். அவரது மரணத்தை எதிர்கொள்ள இஸ்லாமிய மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

இதனால் பின்லேடன் விவகாரத்தில் மீண்டும் பரபரப்பு எற்பட்டது. இந்த நிலையிலேயே மேற்படி இணைய தளம் பின்லேடன் உயிருடன் இருப்பதாக தகவல் வெளியிட்டுள்ளது.

# செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பான புத்தகத்திற்கு முதல் பரிசு

(லண்டன்)

செப்ரெம்பர் 11ஆம் திகதி நடந்த தாக்குதல் தொடர்பான வெளிநாட்டுப் புத்தகத்திற்கு இங்கிலாந்தில் முதல் பரிசு கிடைத்துள்ளது.

பிரெஞ்சு எழுத்தாளர் பிரெடிக் பெயக்பெடர் செப்ரெம்பர் 11ஆம் திகதி நடந்த உலக வர்த்தக மையத் தாக்குதலின் போது மேல் மாடியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு தந்தை தனது குழந்தைகளுடன் உயிருக்குப் போராடியதை புத்தகமாக எழுதியுள்ளார். இந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. வின்டோஸ் ஓன்தவேல்டு என்றபெயரில் எழுதப்பட்டுள்ள இப் புத்தகம் சிறந்த வெளிநாட்டுப் புத்தகமாக இங்கிலாந்தில் தேர்வு செய்யப் பட்டுள்ளது. இதற்குப் பரிசாக 17 இலட்சத்து பத்தாயிரம் ரூபா வழங்கப் படுகின்றது. இத் தொகையை எழுத்தாளரும் மொழி பெயர்ப்பாளர் பிராங்க் வைனியும் பகிர்ந்து கொள்வர்.



தாய்லாந்தில் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், தங்களுக்கு உதவியாகக் குரங்குகளை வைத்துக் கொள்கின்றார்கள். பாங்கொங் நகரில் தேங்காய், பழம் விற்கும் வியாபாரிக்கு ஜேகி என்ற மூன்று வயதுப் பெண் குரங்கு உதவி செய்து வருகின்றது.

# வியட்னாம் போர் 30 ஆண்டு நிறைவு 7500 பேருக்கு பொது மன்னிப்பு

வியட்னாம் உடன் அமெரிக்கா நடத்திய போர் முடிவுக்கு வந்து நேற்றுடன் 30 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.

1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி பகல் 11 மணிக்கு போர் முடிவுக்கு வந்தது. இதற்கு அடுத்த ஆண்டு வியட்னாம் தலைநகர் சைகோன் பெயர், ஹோசிமின் சிட்டி என மாற்றப்பட்டது. இந்தப் போரில் 20 லட்சம் வியட்னாமியர்களும், 58 ஆயிரம் அமெரிக்கா இராணுவ வீரர்களும் பலியானர்கள்.

போர் முடிவுக்கு வந்த 30 ஆம் ஆண்டு நிறைவையொட்டி வியட்னாம் சிறைகளில் உள்ள ஏழாயிரத்து ஐந்நூறு பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.



அமெரிக்காவில் சனாதிபதி மாளிகை அமைந்துள்ள வெள்ளை மாளிகை வளாகத்தில் மரம் நடுவிழா நடைபெற்றது. இதில் அதிபர் ஜோர்ஜ் புஷ், விவசாயத்துறை செயலாளர் மைக்ஜோகன் ஆகியோர் கலந்து கொண்டு ஏராளமான மரக்கன்றுகளை நட்டனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாத இறுதியில் அமெரிக்கா முழுவதும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. ஆர்பர் தினம் என்று அழைக்கப்படும் இந்த மரம் நடுவிழா 133ஆவது ஆண்டாக நடைபெற்றது.

# நேபாளத்தில் அவசர காலநிலை முடிவுக்கு வந்தது: மன்னர் அறிவித்தார்

(காத்மண்டு)

நேபாளத்தில் ஒரு மாத காலம் நீடித்த அவசர கால நிலைமை முடிவிற்கு வந்துள்ளதாக நேபாள மன்னர் அறிவித்துள்ளார். இருந்த போதிலும் பெப்ரவரி மாதம் பெற்றுக் கொண்ட விசேட அதிகாரங்கள் தொடர்ந்தும் இருந்து வருமென்று அவர் மேலும் தெரிவித்தார். நேபாள மன்னர் ஞானேந்திராவின் இந்த அறிக்கை நேற்று முன்தினம் நள்ளிரவு விடுக்கப்பட்டது. அவசர கால நிலைமை அமுலில் இருந்த காலத்தில் பொலிசாரிற்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எந்த வித முன்னறிவித்தலுமின்றி வீடுகளிற் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளல், சந்தேக நபர்களைக் கைது செய்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தல் என்பன இதற்குள் அடங்கும். மாவோ கிளர்ச்சி வாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவென பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நேபாள அரசாங்கத்தை மன்னர் ஞானேந்திரா பதவி நீக்கம் செய்து சனநாயக வழி முறைகளை இடை நிறுத்தி சகல





வித அதிகாரங்களையும் தாமே பொறுப்பேற்றுக் கொண்டார். மக்களின் சிவில் உரிமைகள் இடை நிறுத்தப்பட்டதோடு பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதம மந்திரியும் கைது செய்யப்படடிருந்தார். மவோ தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதலை நடத்தும் நேபாள இராணுவத்திற்குப் பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இத்தகைய சகல நடவடிக்கைகளுக்கும், உலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகள் இயங்க தீவிரவாதிகள் அனுமதி

(காத்மாண்டு)

நேபாளத்தில் தனியார் பாடசாலைகளை மூட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்த மாவோ தீவிரவாதிகள் இந்த உத்தரவை வெள்ளிக்கிழமை வாபஸ் பெற்றனர். முன்னதாக தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை அடுத்து காத்மாண்டு நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகள் தவிர மற்ற அனைத்து பாடசாலைகளும் இரு வாரங்களாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எம் தேசியத் தலைமைக்கு மேலும் பலம் சேர்க்க

# மே நாளில் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியெடுப்போம்

## -முல்லை மாவட்ட கூட்டுறவுத் தொழிலாளர் ஒன்றியம் அழைப்பு

"எங்கள் மண்ணில் வாழும் தொழிலாளர்கள் இந்த நாளில் மேலும் ஒன்றுபட்டு விடுதலை வேண்டிப் போராடும் தேசியத் தலைமைக்கு கரம் கொடுக்க உறுதியெடுப்போம். எம் தேச நிர்வாகம் எங்கள் கைகளில் இருக்க வேண்டும்" இவ்வாறு மே தினத்தை முன்னிட்டு முல்லை மாவட்ட கூட்டுறவுத் தொழிலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறைகூவலில் தெரிவித்துள்ளது.

அந்தஅறைகூவலில மேலும்.தொழிலாளர்கள் ஒன்று கூடி தொழிலுக்கு உரிமையும் உரிய வேதனமும் தொழில்வாண்மையும், ஓய்வும் கிடைக்க வேண்டி யும், கிடைத்தவைக்கு நன்றி தெரிவித்தும் மகிழும் நாள் மே நாள். பிரித்தானிய நாட்டில் தொழிலாளர் ஒன்று கூடி உரிமை வென்ற நாள் இந்நாள் என்று பெருமை கூறுவர். எங்கள் மண்ணில் எத்தனையோ மேதினங்கள் கடந்துவிட்டன. எங்கள் தொழிலாளரின் கோசங்கள் வானையும் பிளந்த காலங்கள் உண்டு. ஆனால், யாவும் பலனற்ற கோசங்களாகவே சென்று விட்டன. மாறி மாறி வரும் சிங்கள அரசுகளின் இனவாதச் சிந்தனையால் எந்தத் தொழிலும் எந்தத் தொழிலாளரும் சீரான உரிமை களையும், சீரான வருமானத்தையும், சிறப்பான வாழ்வையும் பெறமுடியாமல் உள்ளனர்.

விவசாயம் சரி, கைத்தொழில்சரி, வியாபாரம் சரி, கூட்டுறவுசரி, மீன்பிடிசரி எதிர் நீச்சல் போட்டு வாழ வளர வேண்டிய தொழில்களாவே இருந்து வருகின்றது. அரசின் உறுதியான பொருளாதார கோட்பாடற்ற தன்மையும், தமிழ்ப்பிரதேசங்களை ஓரங்கட்டி விடும் இயல்புகளாலும், திட்டமிட்ட இனவாத நடவடிக்கைகளாலும் எங்களது மண்ணில் வாழும் ஒவ்வொரு தொழிலாளரும் நல்வாழ்வின்றி சொல்லொணாத் துன்பப்பட்டே வாழ்கின்றார்கள். முதலீடு இல்லை. முதலீடு இருந்தால் சந்தை இல்லை, அரச உதவிகள் இல்லை, உறுதியற்ற விலைத்தளம்பல் விலைவாசி உயர்வு என்று தடைகளை அடுக்கிச் செல்லலாம். இவற்றால் அரச அரசசார்பற்ற தொழிலாளர்களும் வாழ்வை ஓரளவுக்காவது நேர்பாதையில் கொண்டு செல்ல முடியாது தவிக்கின்றார்கள்.

வடக்குக் கிழக்கில் வாழும் கூட்டுறவு நிறுவனங்கள் பக்கம் எங்கள் பார்வையைச் செலுத்தினால் எத்தைனையோ மூத்த நிறுவனங்கள் முழு விழாவைக் கண்டு விட்டன. இருக்கும் நிறுவனங்களும் போராலும், அரசின் பொருளாதாரத் தடைகளாலும் மீளமுடியாத வாழ்வா சாவா என திணறிக் கொண்டிருக்கின்றன. பணியாளர்களைப்பார்க்கின் போர் அனர்த்தங்களைச் சுமந்து கொண்டு சமாதான காலத்திலும் மீட்சியின்றி வதைபடுகின்றார்கள். மூன்றாண்டுகள் சமாதான காலம் முடிந்து விட்டது. அரசு எந்த ஒரு மீட்சியையும் தரவில்லை. சுனாமிக்காக கிடைத்த சர்வதேச உதவிகளைக்கூட பொதுக்கட்டமைப்பு உருவாக்கி தமிழர்களுக்கும் அழிந்தவற்றில் ஒரு பகுதியேனும் வழங்க இன்னும் அரசு மறுத்துவருகின்றது. இவற்றால், வழமையான வாழ்வு இல்லை என்பதைவிட வறண்டு போகும் உளச்சோர்வு அதிகமாகிவிட்டது.

கடந்த கால கொடும் போர் நடவடிக்கைகளால் சின்னா பின்னமான தொழில் கட்டுமானங்கள் இன்று அலைக்கோளினால் மேலும் சீரழிந்து விட்டது. "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பது போல் இயற்கையும் எங்களுக்கு கருணை காட்டவில்லை. முல்லை மாவட்டத்தில் வளம்சுரந்த முக்கிய பகுதிகள் அலையால் அடித்துச் செல்லப்பட்டன. எத்தனையோ தொழில் நிறுவனங்கள் தங்கள் அடிப்படைச் சொத்துக்களை இழந்து இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக எம்மின தொழில் வர்க்கத்திற்கு கிடைத்த சாபக்கேடுகளே இவையாகும்.

ஒவ்வோர் மேதினங்களிலும் எங்கள் பிரச்சினைகளை உரக்கச் சொல்வதுதான் வழக்கமாகி விட்டது. கிடைக்கும் பலன் எதுவும் இல்லை. ஆதலால், எங்கள் மண்ணில் வாழும் தொழிலாளர்கள் இந்த நாளில் மேலும் ஒன்றுபட்டு விடுதலை வேண்டிப் போராடும் தேசியத் தலைமைக்கு கரம் கொடுக்க உறுதியெடுப்போம். எம் தேச நிர்வாகம் எங்கள் கைகளில் இருக்க வேண்டும். அது தன்னாட்சி அதிகாரம் அல்லது தமிழீழமாக இருக்க வேண்டும் எங்கள் பசி எங்கள் வளர்ச்சி எங்களுக்கு இயற்கை தந்த அழிவு. எங்கள் தேசியத்தலைவருக்குத்தான் தெரியும். அவர் கையில் ஆளும் உரிமை என்று கிடைக்கின்றதோ அன்றுதான் எம்மிடர் நீங்கும் ஆதலால்.

வடக்கு, கிழக்கு வாழும் தமிழ்த் தொழிலாளர்களே!

கொடுத்த பலத்துடன் கொடுங்கள் இன்னும் பலம். எடுத்த வெற்றிகளுடன் இன்னும் வெற்றி சேரும்

பருத்த எம்வாழ்வு பாரில் நாளை உயரும். விடுத்த செய்திகள் விருட்சமாய் உயரும்.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள மேதின அறைகூவலில்;போர் முடிந்தது சமாதானம் விடிகிறது என்று கூறிய அரசின வார்த்தைகள் மூன்றாண்டு முடிந்தும் இன்றும் ஆரம்ப நிலையிலிருந்து நகரவில்லை. அமைதி என்று கூறிக்கொண்டு ஆயுதக் கொள்வனவும் புலனாய்வு யுத்தங்களும் செய்து கொண்டு எங்கள தமிழினத்தை பூரணமாக அழிக்க முனையும் சிங்கள ஏகாதி பத்திய அரசுகளை இனியும் நம்பலாமா? தன்னாட்சி அதிகாரம் கேட்டதற்கு பாராளுமன்றத்தை கைப்பற்றிய பேரினவாதிகளுக்கு சுகங்கொடுத்த சனாதிபதியை இனியும் நம்பலாமா? "பட்டகாலில் படும் கெட்டகுடியே கெடும்" என்பதற்கிணங்க இனவாதச் சீற்றத் தால் துவளும் எங்கள் மண்ணில் சுனாமி அலைக்கோளின் தாக்கம தாங்க முடியாத ஓர் சோகமாகும். வளஞ்சுரந்த நற்பூமி களில் சுனாமி புகுந்துள்ளதையும்,சூறையாடியதை தொழில் துறைகள் மறக்காது.

சுனாமி தாக்கியதை விட அந்த இயற்கை அழிவுக்கு மேற்குலகங்கள் கொடுத்த உதவிகளை தமிழருக்கு கொடுக்க மனமில்லாத அரசின் நடவடிக்கைகளால் சமாதானம் கிடைக்கும் என்ற சிற்றாசை கூட சிதறிப்போகிறது. நோர்வே மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமல்ல அமெரிக்கா வந்தாலும் சுனாமி அழிவுக்குக் கிடைத்த உதவிகளை தமிழருக்கு வழங்கமாட்டோம் என்ற ஆட்சியாளர் நிலையான சமாதானம் தருவார். இடிந்த அழிந்த தொழில் புலங்களை வாழவைப்பார். தொழிலாளர் வாழ்வை உயர்துவார் என்று ஒருபோதும் இனியும் நாம் நம்பமுடியாது.

அன்பான தொழிலாளர்களே!

எங்களையும் எங்கள் தேசத்தையும் எதிரியாகப் பார்ப்பவர்கள் தரும் சன்மானத்தினால் எங்கள் பிரச்சினை என்றும் தீராது. எங்களை ஆளும் தன்னாட்சி எங்களிடம் கிடைக்கும் போது தான் எந்தப்பிரச்சினையும் தீரும். அதற்கு எங்களுக்கோர் அருமருந்த தலைவர் எங்களோடு வாழ்கின்றார். அவரின் கரங்களுக்கு இது வரை நாம் கொடுத்த பலத்தினால் உலகம் வியக்கும் பல சாதனைகளைப் புரிந்துள்ளோம். மேற்குலக நாடுகள் எமது பிரச்சினையை உண்மை வழிநோக்கி ஆசிக்கும் அளவிற்கு எங்கள் அரசியல் வியாபித்து விட்டது. இனியும் நாம் தன்னாட்சி அதிகாரம் பொதுக்கட்டமைப்பு என்று ஊனக்கண்ணால் பார்ப்பவரிடம் பிச்சை கேட்காமல் வேதனை தீர்க்க சாதனை செய்ய வேண்டும். அதற்கு வேண்டும் வரை தலைமைக்கு கரம் கொடுக்க வேண்டும். தன்னாட்சி வரும் அன்றேல் தமிழீழம் தோன்றும் பன்னலத்துடன் நாங்கள் பாரில் உயரலாம். வீடும் வாழும் எங்கள் நாடும் வாழும். தேடும் செல்வங்கள் தேயாமல் இருக்குமெனக் குறிப்பிட்டுள்ளது.

# வடக்கு-கிழக்கில் யுனிசெப் அனுசரணையில் விற்றமின்-ஏ மருந்து வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

ஆறு மாதம் தொடக்கம் ஐந்து வயதிற்கு உட்பட்ட



அனைத்து சிறுவர்களுக்கும் விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து நேற்று வடகிழக்கு மாகாணம் பூராவும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விற்றமின் ஏ உயிர்ச்சத்து மருந்து வழங்கலினை வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கியது.

இதிலும் குறிப்பாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறுவர்களுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு விற்றமின் ஏ வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்த மருந்து வழங்கல் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்திலும் குறிப்பிடப்பட்ட அனைத்து இடங் களிலும் வைத்து வழங்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டவிற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து மருந்தினை யுனிசெப் நிறுவனத்தின் வன்னிக்கான வதி விடப்பிரதிநிதி வெனிபுறா ஆரம்பித்து வைத்தார்.

நேற்றைய இந்த விற்றமின் ஏ உயிர்ச்சத்து மருந்தினை பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குறிப்பிட்ட வயதுப் பிள்ளைகளுக்கு வழங்கியுள்ளனர். ஒவ்வொரு நிலையத்திலும் பெரும்பாலான குழந்தைகள் விற்றமின் ஏ பெறுவதை காணமுடிந்தது. (கு,ச)

# நிரந்தர காணி உரிமைப் பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி விவேகானந்தநகர் கிராம காணி உரிமையாளர்களுக்கான நிரந்தரக் காணி உரிமைப்பத்திரங்கள் (எல்.டி.ஒ) பொமிற்வழங்குவதற்கான நடவடிக்கையினை கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் எதிர்வரும் மே மூன்றாம் திகதியன்று விவேகானந்தநகர் கிராமமுன்னேற்ற சங்க மண்டபத்தில்வைத்து மேற்படி உரிமைப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதென கரைச்சி பிரதேச செயலக காணிஉத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

# இரு கல்வி வலயங்களுக்கு யு.என்.டி.பி வாகனம் வழங்கல்

(மன்னார்)

மன்னார் கல்வி வலயத்திற்கும், மடுக்கல்வி வலயத்திற்கும் யு.என்.டி.பி நிறுவனம் மூன்று மில்லியன் பெறுமதியான இரண்டு வாகனங்களை வழங்கியுள்ளது. இவற்றுள் மன்னார் கல்வி வலயத்திற்கு எல்ப்வாகனமொன்றும் மடுக் கல்வி வலயத்திற்கு பிக்கப் வாகனமொனறினையும் வழங்கியுள்ளது. அதே சமயம் இரண்டுமில்லியன் ரூபா செலவில் இரண்டு கல்வி வலயங்களுக்கும் பாடசாலை உபகரணங்களையும் அண்மையில் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கன்டர் மோதியதில் மாணவன் படுகாயம்!

(மல்லாவி)

மல்லாவி வடகாட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் கன்டர் வாகனமும், ஈருருளியும் மோதிக்கொண்டதில் ஈருருளியில் பயணம் செய்த பாடசாலை மாணவன் படுகாயமடைந்தார். கிட்ணபிள்ளை ஜெயர (வயது-16) என்ற மாணவனே படுகாயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு நோயாளர்காவு வண்டி மூலம் எடுத்துச் செல்லப்பட்டார். (24)

# கண்டெடுப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கந்தசாமி செந்தூரன் கணேசபுரம் சிங்கபுர தேசிய அடையாளஅட்டை இல: 811264989V; முருகமூர்த்தி குமுதினி சாம்பல் தீவு திருகோணமலை தேசிய அடையாள அட்டை இல 858103932 V மற்றும் சில சில வங்கி அடைவு பற்றுச்சீட்டுக்களும் இரணைமடு வீதியில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# சமகால நிலைப்பாட்டை தெளிவுபடுத்தக் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் பிரதேசத்திற்குட்பட்ட மாதர் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளுக்கிடையில் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதற்கு மன்னார் நகர பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன், கிராம அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீரங்கநாயகி, மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர், மகளிர் மேம்பாட்டுக கழகப் பொறுப்பாளர் உட்பட இருநூற்றிற்குமேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதன் போது சமகால நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியதுடன் எதிர் காலத்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. (18)

# பார்த்தீனியம் விஷச்செடியை கட்டுப்படுத்த விழிப்புடன் செயற்பட வேண்டுகோள்

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு நிலங்களில் பார்த்தீனியம் பெருக்கமடைந்துள்ளது என கிளிநொச்சி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எமது பிரதேசங்களில் இச் செடியின் பெருக்கம் அதிகரித்தால் இங்கு உற்பத்திப் பயிர்கள் அழிக்கப்படுவதோடு, உற்பத்தி பயிர்களும்-வளர்ச்சி அடையாது காணப்படும் என்றார்.

இச் செடியை முழுமையாக அழிகாவிடில் வளர்ச்சி அடைந்து பார்த்தீனியம் பெருகும் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கின்றது. எனவே பார்த் தீனியத்தை முழுமையாக அழிக்க வேண்டும். இதனை அழிப்பதற்கு கிளை போசெட் களைகொல்லியை பாவித்து அழிக்க முடியும். அல்லது குறைவாக இருக்குமிடங்களில் மண்வெட்டியால் கொத்தி அழிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இச்செடியின் பூவின் மகரந்த மணி உருவாகும் காலத்தில் மனிதர்களுக்கு சுவாசத்தொற்று நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்டவிவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் இ. சௌநதரராசன் தெரிவித்துள்ளார். (46)

# தமிழ் உழைப்பாளர்களது விடிவும் மேன்மையும் தமிழீழ தேசத்தின் விடுதலையுடன் பின்னிப்பிணைந்தது

## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

***தமிழ்த்தேசத்தின் உழைப்பாளர்களது விடிவும், வாழ்நிலை மேன்மையடைதலும், தமிழீழ தேசத்தின் விடுதலையுடன் பின்னிப்பிணைந்ததாகும், ஒடுக்குதலும்,சுரண்டலும் அது எந்த வகையினதாக இருந்தாலும் மெய்யான மனிதகுலத்தின் விடிவுக்குப் பெரும் தடையாகவே உள்ளது என யாழ். மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.***

மே நாள் தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒடுக்குதலுக்கும், சுரண்டுதலுக்கும் எதிரான போராட்டங்கள் என்றுமே ஓய்வதில்லை. தொடர்கின்றன. இவையிரண்டும் ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் புதுப்புது வடிவங்களெடுக்கின்றன, தேய்வதில்லை.

விடிவிற்கான போராட்டங்களும் அந்தந்த வரலாற்றுக் கட்டங்களுக்கேற்ப புதிய வடிவங்களெடுக்கின்றன. அரசியல், இராணுவ, சமூக பண்பாட்டு, பொருளாதார பாய்ச்சல்களுடன் சமரசத்திற்குட்படாது இப்போராட்டங்கள் பரிணாம வளர்ச்சி எய்துகின்றன.

விடுதலையும், சமூக நீதியும் நிலைநாட்டப்படவேண்டும் என்பதிலேயே எமது தேசிய விடுதலைப் போராட்டம் நிலைகொண்டுள்ளது. தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்டமானது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் அதன் பேராற்றல் மிக்க வழிகாட்டலில் வெற்றிப்பாதையில் வீறுடன் நடைபோடுகின்றது.

வெறும் குறுகிய பேரினவாத அரசியல் நோக்கங்களுக்காக சிறிலங்கா அரசியலாளர்கள் சிறிலங்காவின் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வுரிமைகளை கால்களின் கீழ்ப்போட்டு துவம்சம் செய்கின்றனர். சிறிலங்கா உழைக்கும் வர்க்கத்தினர் தமது அரசியலாளரின் நயவஞ்சகப் போக்கைப் புரிந்து கொள்வர் என்ற எதிர்பார்ப்பும் எமக்குண்டு. தமிழீழ தேசத்தின் உருவாக்கத்திலேயே சிங்கள தேச உழைக்கும் வர்க்கத்தினரின் அரசியல் சமூகபுத்துயிர்ப்புமுள்ளது. எமது தேசிய விடுதலைப் போராட்டமானது மனித மேன்மையும், மனித உரிமைகளும் பேணப்படவேண்டும், புதிய மனிதன் உருவாக வேண்டும் என்ற உயரிய மனித வேட்கையை உள்ளார்ந்த விசைகளாகக் கொண்டுள்ளது.

தமிழ்த்தேசிய அபிலாசைகளுக்கு துரோகம் செய்யும் இராணுவத்துணைக்குழுக்கள், புதிய அரிதாரப் பூச்சுடன் உலா வருவதை இனங்காணுங்கள் என யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (33)

# சமூகவியல்துறை மாணவர்கள் சமூகநலவுதவிகளை வழங்கவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக நல உதவிகளை வழங்கவுள்ளனர்.

இதற்காக சமூகவியல்துறை மாணவர்கள் இணைந்து செயலணிக்குழு ஒன்றை அமைத்துள்ளனர். இக்குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மக்களின் தேவைப்பாடுகள் பற்றிய விபரங்களைத் திரட்டி வருகின்றனர். (33)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு புலம்பெயர்ந்தோர் நிதியுதவி

(தென்மராட்சி)

சாவகச்சேரி மருத்துவமனையைப் புனரமைக்க புலம்பெயர்ந்த மக்களால் பத்து லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையின் சேதமடைந்துள்ளபகுதியைப்புனரமைக்க இப்பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்து, அவுஸ்திரேலியா, கனடா, லண்டன் போன்ற நாடுகளில் வசிக்கும் மக்களால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வுதவிகள் மூலம் மருத்துவமனை அபிவிருத்தி சபையினர் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர். (28)

# இளைஞர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த சனவரி மாதம் 29 ஆம் திகதி உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த சு.சர்வானந் (வயது-24) என்பவர் காணாமல் போயிருந்தா. இவா காணாமல் போன சம்பவத்துக்கும், சிறிலங்கா இராணுவப்புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்புகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டி காணாமல் போனவரது தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவே புலனாய்வுத் துறையினர் மீது விசரணைகள் மேற்கொள்ளப்பட்டன கடந்த 27 ஆம் திகதி முற்பகல் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகரவினால் அவரது அலுவலகத்தில்நடத்தப்பட்ட விசாரணைகளின்போது அங்கு பிரசன்னமாகியிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவின் யாழ்.மாவட்ட அதிகாரி கப்புகமதாஸ பிரஸ்தாப இளைஞனைக் கைது .செய்யவில்லை என்று தம்மீதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

எனினும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (33)

# அவுஸ்.தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு உதவி

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பாடசாலை மாணவர்களின் நலன் கருதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இயங்குகின்ற தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆறு முக்கிய பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளை இந் நிறுவனம் வழங்கியுள்ளது. அத்துடன் இந்நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி நவீனசந்தையின் மேல்மாடியில் இலவசக்கணனிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்திலுள்ள மாணவர்களின் நன்மைகருதி இக்கல்வி சார்ந்த திட்டங்களை நாம் முன்னெடுத்து வருவதாக அதன்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (28)

# தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதார அங்கீகார முத்திரை இடப்படாத மாட்டுஇறைச்சியினை விற்பனைக்காக வைத்திருந்த வியாபாரி ஒருவரிடம் இருந்து 1000 ரூபா தண்டப்பணம்அறவிடப்பட்டதுடன் அவர் வைத்திருந்த 14 கிலோகிராம் இறைச்சியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நாவாந்துறைச் சந்தையில் மேற்படி மாட்டிறச்சியினை விற்பனைக்காக வைத்திருந்தபோது நேற்றுமுன்தினம் இவரைக்கைது செய்த யாழ்.மாநகரசபையின் பொதுச் சுகாதாரப்பிரிவினர் அவரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இதன்போது பிரஸ்தாப வியாபாரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்கினராஜா இவரிடம் இருந்து 1000 ரூபா தண்டப்பணமாக அறவிட்டதுடன் அவர் வசமிருந்த 14 கிலோக்கிராம் இறைச்சியையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். (33)

# சட்ட விரோத மின்பாவனை; ஏழு பேரிடம் 35ஆயிரம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மின்பாவனை செய்த குற்றத்திற்காக ஏழு பேரிடமிருந்து 35 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக மின்பாவனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கோப்பாய்ப் பொலிசாரின் உதவியுடன் கொக்குவில், திருநெல்வேலி, கோப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஏழு பேர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்..

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்த யாழ்.மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜா ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா வீதம் ஏழு பேரிடமிருந்தும் 35 ஆயிரம் ரூபாவைத் தண்டப்பணமாக அறவிட்டார். அத்துடன் அவர்கள் பாவனைக்குட்படுத்திய மின்சார உபகரணங்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். (33)

# தென்மராட்சிக்கு மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

*–பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ்*

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசம் எங்கும் மின் விநியோகம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வறியகிராமங்களுக்கும் இதுவரை காலமும் மின்சாரம் கிடைக்காத பின்தங்கிய கிராமங்களுக்கும் வரும் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் கூடிய கவனம் செலுத்துவதுடன் தற்பொழுது நடைபெற்றுவரும் மின் நிர்மாணப் பணிகளை துரிதகதியில் நிறைவேற்றவும் தாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கொடிவாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

யாழ்.குடா நாட்டு மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்குரிய நிதியைச் சேகரிக்கும் வாரமாக அனுஷ்டிக்கப்படும் இக்கொடி வாரம் நாளை தொடக்கம் எட்டாம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.மாணவர்களது அடைவுத் தேர்ச்சியை மேம்படுத்தல்,விளையாட்டுத்துறையை மேமபடுத்தல், ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதனூடாக மாணவர்களின் கல்வியை வளம்படுத்தல் போன்றன இதன் நோக்கமாகும். (33)

# தென்மராட்சியில் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கித்தரும்படி கோரிக்கை விடுப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட வேண்டும் என தென்மராட்சி பிரதேச அபிவிருத்திச்சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்க இப்பிரதேசத்தில் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

இதன்படி நுணாவிலில் உள்ள கைத்தொழில் பேட்டையையும் கச்சாய் கைத்தொழிற்சாலையையும், மட்டுவில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலையையும் முதல் கட்டமாக இயங்கவைக்கவாவது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசஅபிவிருத்தி சபையினர் கோரியுள்ளனர் (28)

# வறுமை ஒழித்தல் ஆய்வரங்கு நாளை மறுதினம் இடம்பெறும்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக வறுமை ஒழித்தல் தொடர்பான ஆய்வரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

அரசசெயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை இந்த ஆய்வரங்கு இடம்பெறும்.

புனர்வாழ்வு புனரமைப்பு, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக வறுமை ஒழிப்பினை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டுமானால் அதற்கு வறுமை ஒழிப்புக் கோட்பாடு பற்றியும், அதன் பயனை அடையவுள்ள மக்களின் இயல்பு நிலை எதிர்பார்ப்புகள் என்ன என்பது பற்றியும், அதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில் அரச, அரசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றியும் தெளிவாக தெரிந்து இருத்தல் அவசியமாகும்.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக மாவட்ட மட்டத்தில் உள்ள திணைக்களங்களின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுடனும், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடனும் இந்த ஆய்வரங்கு நடத்தப்படவுள்ளது.

இவ் விடயங்கள் பற்றிய விளக்கவுரையும் அதனைத் தொடர்ந்து குழுநிலை ஆய்வும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

ஆகவே இவ் ஆய்வரங்கில் பங்குபற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (33)

# தொலைபேசி இணைப்பை வழங்கக் கோரிக்கை

கைதடிப் பிரதேச தபால் அலுவலகத்திற்கு உடனடியாகத் தொலைபேசி இணைப்பை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இத்தொலைபேசி இணைப்பிற்கான கட்டணமான 20 ஆயிரம் ரூபாவை இலங்கைத் தொலைத்தொடர்பிற்குச் செலுத்தி இணைப்பைப் பெறுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இணைப்பை வழங்குவது தமதமாகி வருவதாகவும் இதனால் இப்பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பிரச்சினைகள் எழுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# வெற்றிகரமான ஆசிரியர்கள் சுனாமிக்குப் பின்

செல்லக்கண்டு செல்வராசா
B.A.DIPINED

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் சிலர் ஒன்று கூடி அடுத்துவரும் தசாப்தத்தில் தமது பாடசாலை ஆரம்பக்கல்வி பாடவிதானம் எவ்வாறு அமைய வேண்டும் என 1980 களில் திட்டமிட்டனர்.

ஒன்பது வயது தொடக்கம் பதினாலு வயது வரையான மாணவர்களது கற்றல் கற்பித்தற் செயற்பாடு ACDT முறையிலானதாக அமைய வேண்டுமென முடிவெடுத்தனர்.

A-ART - சித்திரம்

C-CRAFT -கைத்திறன் செயற்பாடு

D-DESIGN-வடிவமைப்பு

T-TECHNOLOGY தொழில்நுட்பத்திறன்

ஒன்றிணைந்ததாக பாடங்கள் திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டும்.

அதாவது ஒரு ஆக்கப் பொருளை/செயலைச் செய்வதனூடாக கணிதம், மொழி, சுற்றாடல் ஆகிய பாடங்கள் கற்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.



செயல் சார்ந்த கற்றல் மூலமே மாணவர்கள் விளங்கிக் கற்பர். (எமது தேர்வு மையக் கல்வியானது விளங்கிக் கற்பதனை விடமென்று 'விளங்கிக்' கற்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தமை அவதானிக்கப்படுகின்றது)

சுனாமியின் பின்னரான கல்வி இத்தகைய ஒரு முறையினைத் தழுவியதாக அமைக்கப்படுவதன் மூலமே பாதிக்கப்பட்ட பிள்ளைகளை ஓரளவு இயல்பு நிலைக்குக் கொண்டுவரலாம் அவர்களது கற்றல் ஆற்றலை விருத்தி செய்யலாம்.

மாணவர்களை ஏதாவது ஒரு செயற்பாட்டில் ஈடுபடுத்தி அதனூடாக மொழித் திறன்கள், கணித எண்ணக்கரு விருத்தி, சுற்றாடல் பற்றிய அறிவு ஆகியவற்றை மேம்படுத்தலாம்.

கடதாசியில் தோணி/பொம்மை/ பட்டம்/காற்றாடி செய்தல். கரும்பலகை வெண்பலகைக்கான துடைப்பம் செய்தல்.

பிளாஸ்ரிக் வெற்றுச் சோடாப் போத்தல்/உறிஞ்சி (Straw) வேறும் கழித்து விடப்பட்ட பொருட்களில் அலங்காரப் பொருட்கள் செய்தல்.

பிளாஸ்ரிக் வெற்றுச் சோடாப் போத்தல்/ கழித்துவிடப்பட்ட வேறு பொருட்களில் உபகரணங்கள் ஆக்கி ஒலிசார்ந்த விளையாட்டுக்கள் விளையாடுதல், பொலித்தீன் தாள்களில் சிறிய 'பரசூட்' செய்தல் போன்ற இன்னோரன்ன மிக எளிய செயற்பாடுகளை வடிவமைக்கலாம்.

இவற்றில் மாணவர் ஈடுபடும் போது மாணவர்களது அனைத்துப் புலன்களும் ஒன்று குவிக்கப்படும். மூளைத்திறன் அதிகரிக்கப்படும்.

செயற்பாட்டின் போது அறிவுறுத்தல்களை ஆசிரியர்கள் தெளிவாகக் கூறுவர். மாணவர் அவதானமாகச் செவி மடுப்பவர். கிரகிக்கும் ஆற்றல் மேம்பாடடையும் ஒரு முடிவுப் பொருளைச் செய்வதற்கான மூலப்பொருட்கள்/ கருவி உபகரணங்களைப் பட்டியற்படுத்தி எழுதுவதன் மூலம் எழுதுதல்,வாசித்தற்திறன்கள் வளர்க்கப்படும்.

மாணவர் செயல்களில் இறங்கும் போது ஏனைய மாணவர்களுடனான ஊடாட்டத்திற்கும் வாய்ப்பு அதிகரிக்கும். அதனால் பிள்ளையிடமிருந்து பிள்ளை கற்றல்- விட்டுக்கொடுக்கும்-உதவும் மனப்பாங்கு போன்ற விழுமியங்கள் வளர்த்தெடுக்கப்படும்.

செய்யப்பட்ட-செய்யப்போகும் முடிவுப் பொருளை வரைவதன் மூலம் ஒருவனின் ஆக்கத்திறன் ஆற்றல் மேலும் வளரும். நீளம், அகலம்,அளத்தல், கொள்ளளவு, நிறைபற்றிய பட்டறிவு பெறுவதன் மூலம் கணித எண்ணக்கருவை பெற்றுக்கொள்வர். கணிதச் செய்கைகள் பற்றி இலகுவாக விளக்கம் பெறுவர்.

பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் தன்மைகளை உணர்ந்துகொள்வர். இதனூடாக சுற்றாடல் பற்றிய ஒரு விரிந்த பார்வையும் கிடைக்கும்.

கைவிரல்கள் மற்றும் அவயங்களின் நுண்ணிய அசைவுகள் மூளையின் ஆற்றலை மேலும் அதிகரிக்கும் எனச் சொல்லப்படுகின்றது.

இவையனைத்திற்கும் ஆசிரியர்கள் தம்மை வாண்மை மிக்கவர்களாக ஆக்கிக்கொள்ளல் அவசியம். பாடவிதானம் பற்றிய தெளிவையும், ஆக்கத் திறன் ஆற்றலையும் கொண்டிருப்பதன் மூலமே ஆசிரியர்கள் இதனை வெற்றிகரமாகச் சாதிக்கலாம்.



சிறுவர்கள் உடல், உள, சமூகம் சார்ந்த தாக்கங்களால் பாதிக்கப்படும் போது அவர்கள் இயல்பு நிலை மாறி பின்னடைவது தவிர்க்கமுடியாதது.

இழப்புக்கள்,

அழிவுகள்,

பிரிவுகள் போன்ற நெருக்கீடுகளை பெரியவர்களாகிய எம்மாலேயே எதிர்கொள்ள முடியாதுள்ள போது இளஞ்சிறார்கள் எவ்வளவு பாதிக்கப்படுவர் என்பது சொல்லாமலே விளங்கும். அவர்களைப் பாதிப்புக்குள்ளிருந்து மீட்டு இயல்பு நிலைக்குக் கொண்டுவர பல விசேட வழிமுறைகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

வெளிப்பாட்டு முறை,

நடத்தைச் சிகிச்சை முறை,

விளையாட்டுமுறை,

சம்பவ விரிப்பு முறை.

தளர்வுப் பயிற்சி,

உளவளத்துணை,

குடும்பவளத்துணை

எனப் பல முறைகள் கூறப்படினும் ஆசிரியர்கள் இலகுவாக கையாளத்தக்க முறையாக வெளிப்பாட்டு முறை வாய்த்துள்ளது. வெளிப்பாட்டு முறையுள்

பாடல்
ஆடல்
வரைதல்
உருவங்களை ஆக்குதல்
கைத்திறன் செயற்பாடுகள்
நடித்தல்
கதை சொல்லல் போன்றன அடங்கும்.

உண்மையில் பாதிப்பிற்குள்ளான மாணவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதலும், கற்றல் ஆற்றலை விருத்தி செய்தலும் இன்றைய நிலையில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் ஒரு பாரிய சவாலாகும். இன்றைய நிலையில் பாதிப்புக்குட்பட்ட பிரதேசங்களில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டினை ACDT முறை மூலம் முன்வைக்கும் ஆசிரியர்களே வெற்றிகரமான ஆசிரியர்களாக மிளிர முடியும். ■

## -இரண்டாம் கட்டமாக-
## 800 சிறிலங்கா இராணுவத்தினர் ஹெய்ட்டி புறப்பட ஏற்பாடு

(கொழும்பு)

ஹெய்ட்டியில்ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினருடன் இணைந்து பணியாற்றுவதற்காக இரண்டாம் கட்டமாக 800 சிறிலங்கா இராணுவத்தினர் ஹெய்ட்டிக்கு புறப்படவுள்ளதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஐக்கிய நாடுகள் அமைதிப்படையுடன் இணைந்து பணியாற்றச் சென்ற 800 படையினர் அங்கு ஆறுமாதகால தங்கள் கடமையை நிறைவு செய்து நாடுதிரும்பவுள்ள நிலையில் இரண்டாவது பிரிவினர் ஹெய்ட்டி பயணமாகவுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் [illegible]தம் முதல் சிறிலங்கா படையினர் ஹெய்ட்டியில் ஐக்கிய ந[illegible] அமைதிப்படையினருடன் இணைந்து பணியாற்றி வருகின்றன[illegible] கடந்த மார்ச் மாதம் ஹெய்ட்டியில் [illegible]ளிகள் வசமிருந்த [illegible] நிலையத்தை மீட்க ஐ.நா. படையினர் [illegible]ண்ட முயற்சியி[illegible] போது இரு சிறிலங்காப் படையினர் [illegible]ப்பட்டதுடன், இ[illegible] காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பை யார் எதிர்த்தாலும் அதனை நிறைவேற்றியே தீருவேன்

### சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளை உள்ளடக்கிய உத்தேச பொதுக்கட்டமைப்பை யார் எதிர்த்தாலும் அதனை நிறைவேற்றியே தீருவேன் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சூளுரைத்துள்ளார்.

கொழும்பு பிலியந்தலையில் மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவமொன்றில் நேற்று முன்தினமிரவு கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்; ஆழிப்பேரலையினால், பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கே விடுதலைப்புலிகள் இந்த உத்தேச பொதுக்கட்டமையைக் கோரி வருகின்றனர். இது நியாயமானது என்பதால் அதனை நிராகரிக்க முடியாது. இது தொடர்பாக நோர்வே ஊடாகவோ அல்லது வேறு தரப்பு ஊடாகவோ பேச்சுக்கள் நடத்தப்படும். விடுதலைப்புலிகளின் இக்கோரிக்கை நிறைவேற்றப்படாது விட்டால் சமாதானம் பற்றி அவர்களுடன் பேச முடியாது. அன்று தனிநாடு கோரியவர்கள் பின்னர் தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாகத்திற்கு முன்வந்துள்ளார்கள். பல்வேறு காரணங்களினால் அந்த கோரிக்கையை ஏற்க முடியாது. ஆனால் பொதுக்கட்டமைப்புக் கோரிக்கையை ஏற்க முடியும். இதற்கு ஆளும் கட்சியிலுள்ள ஒன்பது கட்சிகளில் ஜே.வி.பி. மட்டும் தான் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. ஏனைய கட்சிகள் முழுமையான ஆதர வுக்கு இணங்கியுள்ளன. எதிர்காலத்தில் ஜே.வி.பி.யும் ஆதரவு தரும் என்றே நம்புகின்றேன். எனினும் யார் எதிர்த்தாலும் இதனை நிச்சயம் நிறைவேற்றியே தீருவேன். உத்தேச பொதுக்கட்டமைப்பானது சமாதானப் பாதையில் முன்னெடுக்கப்படும் முதல் நடவடிக்கையாகும். இந்த நடைமுறைகள் மூலம் நாட்டு மக்களை ஏமாற்ற எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் சிறிலங்கா சனாதிபதி தெரிவித்தார்.

# கணவருடன் தொடர்பு கொள்ள முயன்றேன் ஆனால் தொலைபேசி துண்டிக்கப்பட்டு விட்டது

## -திருமதி யோகராணி சிவராம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் டி.சிவராம் சம்பவதினம் மாலை 4.45 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக அவரது மனைவி திருமதி. யோகராணி சிவராம் (வயது-40) தெரிவித்துள்ளார்.

தனது கணவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளருக்கு அவர் தெரிவிக்கையில், சம்பவதினம் இரவு 11.00 மணியளவில் எமக்கு அறிமுகமான ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டில் ஏதாவது பிரச்சினையா? என்று கேட்டார். அப்படி எதுவும் இல்லையென்றேன்.

இதனையடுத்து எனது கணவரின் கையடக்கத் தொலைபேசிக்கு ஓரிரு தடவைகள் தொடர்பு கொள்ள முயன்ற போது மணி ஒலித்தது. ஆனால் தொலைபேசித் தொடர்பு கிடைத்தவுடன் அது துண்டிக்கப்பட்டு விட்டது.

பின்னர் ஏற்கனவே தொலைபேசியில் தொடர்பு கொண்டவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இப்படிஒருசம்பவம்அதாவது கடத்தப்பட்டுள்ளார் என்று அறிந்ததாகவும், எதற்கும் பொலிசில் முறைப்பாடு ஒன்றைச் செய்யுமாறும் கூறினார்.

நள்ளிரவு எனது சகோதரருடன் பம்பலப்பிட்டிப் பொலிசுக்குச் சென்று முறைப்பாடு செய்தேன். மறுநாட் காலை பாராளுமன்றத்தை அண்மித்தபகுதியில்துப்பாக்கிச் சூட்டுடன் சடலமொன்று கிடப்பதாக தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது எனது கணவர் இறந்து கிடந்தார் என்றார்.

### -சிவராமின் படுகொலையை-

# ஐந்து பொலிஸ் குழுக்கள் விசாரணை செய்கின்றனவாம்

(கொழும்பு)

பிரபல இராணுவ ஆய்வாளரும், ஊடகவியலாளருமான டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டமையை விசாரிக்க ஐந்து விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் தலைமையில் இந்த ஐந்து விசாரணைக்குழுக்களும் அமைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நீர் உயிர்வள தொழில்நுட்ப ஆசிரியர்கள் கவனத்திற்கு!

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் நீர் உயிர் வளத் தொழில்நுட்ப ஆசிரியர்கள் அனைவரும் 26-03-2005 வர்த்தமானி பிரசுரத்திற்கு அமைவஉள்நாட்டு நன்னீர் தேக்க உயிர்வளத்தொழில்நுட்ப பாடத்திற்கான விண்ணப்பத்தினை தயாரித்து தங்களது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்திற்கேற்ப ஆசிரியர் பயிற்சி கலாசாலை முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (சோ)

# வைத்திய அறிக்கைகள் மாறுபாட்டால் விபரீதம்!

(கொழும்பு)

கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் இரண்டு நோயாளிகளின் வைத்திய அறிக்கைகள் மாறுபட்டபடியால் ஆறுபிள்ளைகளின் தயாரான நீர்கொழும்பு பான்கடை சந்தியைச் சேர்ந்த 40 வயதுடைய சித்தி நகீரா என்பவரின் கால் வைத்திய குழுவால் சத்திரசிக்சை செய்து அகற்றப்பட்டுள்ளது. இவரின் கணவர் வீதிகளில் கடலை வியாபாரம் செய்து வாழ்க்கைநடத்துகின்றார். கால் அகற்றப்பட்டு ஒன்றரை மாதகாலமாகியும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாவில்லை என பாதிக்கப்பட்டுள்ள பெண் தெரிவித்துள்ளார்.

# சனநாயகத்திற்கு விரோதமாக ஐ.ம.சு.மு அரசு செயற்படுகிறது

## –ஐ.தே.க. பிரதிச்செயலர் கருத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சனநாயகவாத அரசாங்கம்அல்ல.அது சனநாயகத்திற்கு எதிரான அரசாங்கம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம்நடைபெற்றஊடக மாநாட்டில் இந்தக் கருத்தை கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டார்

இதனை மையமாகக் கொண்டே எதிர்வரும் மேதினத்தை நிகழ்த்தப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கம் பல்வேறு வகைகளில் மனித உரிமைகளை மீறி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுச்சேவை ஆணைக் குழுவின் அதிகாரங்களை மீறும் வகையில் பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்களை நியமித்தல்

• பல்கலைகழகங்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்தல் மற்றும் சட்டக்கல்லூரியின் அனுமதியில் மாற்றம் கொண்டு வரப்பட்டமை போன்ற சம்பவங்கள் சனநாயக விரோத செயல்களாகும் என ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். (32)

# விபத்து குறித்து இடைக்கால அறிக்கை

(கொழும்பு)

பொல்காவல விபத்துச் சம்பந்தமான இடைக்கால அறிக்கையை போக்குவரத்து ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளது. அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ்.ஜயவீர தகவல் தருகையில்

பொலிசாரின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் விரிவான அறிக்கை ஒன்று சனாதிபதி சமர்ப்பிக்ககப்படுமென்று தெரிவித்தார். இத்தகைய விபத்துக்களை தவிர்ப்பதற்கானவழிவகைகள் பற்றிய பரிந்துரைகளும் இதில் இடம் பெற இருக்கின்றன. இதற்கிடையில் உயிரிழந்த குடும்பங்களின் நெருங்கிய உறவினர்களிற்குத் தலா 25000 ரூபாவை வழங்குவதற்கான நடவடிக்கைகளட எடுக்கப்பட்டுள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராதெரிவித்துள்ளார்.

# பதின்மூன்று இந்திய பிரஜைகளை நாடுகடத்த நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

கடந்த வியாழக்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை மற்றும் குருக்கள்மடம் ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 இந்திய பிரஜைகளையும் உடனடியாக நாடு கடத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக விசா இன்றி சட்ட விரோதமான முறையில் குடும்பங்களுடனும தனியாகவும் தங்கி யிருந்து சீவல் தொழிலில் இவர்கள்

குறிப்பிட்ட இந்தியப் பிரஜைகளை குடியகல்வு, குடிவரவு திணைக்கள அதிகாரிகள் ஊடாக நாடு கடத்துமாறு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தர விட்டுள்ளார். எதிர்வரும் இரண்டாம் திகதி இவர்களை சட்டவிரோத குடியேற்றக்காரர் தடுப்பு முகாமில் இதற்காக ஒப்படைத்து இது பற்றிய அறிக் கையை ஒன் பதாம் திகதி நீதிமன்றத் தில் சமர்ப் பிக்குமாறு சிறைச்சாலை அத்தி யட்சகருக்கு அந்த உத்தரவில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# நீதிமன்றிற்கு விசப்பாம்புடன் வருகைதந்த பெண்ணினால் பரபரப்பு

(கொழும்பு)

பதுளை நீதவான் நீதிமன்றத்தில் சேவைபுரியும் பெண் ஒருவர் மன்றிற்கு விசப்பாம்பை எடுத்து வந்த நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட பெண் பணிக்கு வரும் போது வீதியில் ஊர்ந்து சென்றதாகக் கூறப்படும் இந்த விசப்பாம்பினை உறை ஒன்றினுள் வைத்து எடுத்து வந்துள்ளார். எனினும் அதன் விசத்தன்மையை அவர் அறிந்திருக்கவில்லை.

இந்த நிலையில் நீதிமன்ற கட்டடத்தில் இந்த விடயம் குறித்துத் தகவல் தெரியவந்ததையடுத்து நீதவான் பிரதீப் ஏ.அபேரட்ன நீதிமன்றத்திற்கு பிறிதொரு வழக்கிற்காக வந்திருந்த வனவிலங்குத்துறை அதிகாரி ஒருவரிடம் குறிப்பிட்ட பாம்பை ஒப்படைத்தார். இதேவேளை இந்தப்பாம்பு அரிதாக உயிர்வாழும் விசப்பாம்பு எனத்தெரிவிக்கப்பட்டது.

# உணவகம், தேநீர்ச்சாலை,குளிர்பானநிலையம் ஒன்றிற்கான அடிப்படை ஒழுங்குகள் —

உணவகம், தேநீர்ச்சாலை, குளிர்பானநிலையம் ஒன்றிற்கான அடிப்படை ஒழுங்குகள் தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகள் பின்வரும் அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது. இதனைக் கண்டிப்பாக பின்பற்றுமாறு அது கேட்டுக் கொண்டுள்ளது.

அவ்அறிவுறுத்தலின் விபரம் பின்வருமாறு;

*நிலையம் பெயர்ப்பலகையை கொண்டிருத்தல் வேண்டும், *கட்டடம்மெருகிடப்பட்டு தீந்தைஇடப்பட்டு இருத்தல்வேண்டும், போதியளவு காற்றோட்ட வசதி இருத்தல் வேண்டும், கட்டடம் சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தல்படி பராமரிக்கப்படல்வேண்டும்., *தளபாடங்கள் மைபூசப்பட்டு துரு இன்றி தூய்மையாகப் பேணப்படல் வேண்டும்., *குடிப்பதற்கும் பிறதேவைகளுக்கும் போதியளவு சுகாதாரமான பாதுகாப்பான நீர் இருத்தல்வேண்டும். (குடிப்பதற்கு கொதித்தாறியதும் பிறபாவனைக்கு குறைந்தது வாரம் இரு முறை குளோரின்இடப்படல்வேண்டும். மாதம்ஒரு தடவை கிணறு துப்புரவாக்கப்படல் வேண்டும்).,* வாடிக்கையாளர் களுக்கும், பணியாளர்களுக்கும் சுகாதாரமான நீரடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் இருத்தல்வேண்டும். (உண வகங்களுக்கு நீரடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் கட்டாயம் இருத்தல்வேண்டும்.),*.நிலையத்தின் உணவு பரி மாறும் மேசைகளின் அருகாக மூடிய கழிவுக்கூடைவைத் திருத்தல் வேண்டும்.நிலையத்தில்சேரும் மொத்தக்கழிவுகளை மூடியுள்ளகழிவுத்தொட்டி ஒன்றில்போட்டு கிரமமாக எரித்தோ அல்லது புதைத்தோ விடுதல்வேண்டும். தெளிவான நீர்க் கழிவுகள்யாவும் மூடிய குழாய்/கால்வாய்மூலம் மூடிய கிருமி அழிப்பு உறிஞ்சுதொட்டியூடாக தொட்டி ஒன்றினுள் சேர்க் கப்படுதல் வேண்டும்.சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனைக்கு ஏற்ப அல்லது கிரமாக அகற்றிவிடுதல்வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் கழிவுகள் சேகரிக்கப்படும் இடம் இலையான்களின் பெருக்கிடமாக அமைதல்கூடாது., * சீனி, பால்மா என்பவை துருப்பிடியாத தன்மையுடைய பாத்திரத்தினுள் போடப்பட்டிருப்பதுடன், தேநீர் ஊற்றும் தட்டு துருப்பிடியாத படியும் சுத்தமாகவும்பேணப்படல்வேண்டும்., *. நிலையத்தில் ரொட்டி போடப்படின் ரொட்டிபோடப்படும் மேசை, ரொட்டிசுடும் தட்டு தூசி, சாம்பல், புகாதபடி மூடப்பட்டிருத்தல்வேண்டும். நிலையத்தின் முன்புறமாக ரொட்டி, அப்பம் தயாரிப்பவர்கள் எரிவாயு அடுப்பினை மட்டுமே பயன்படுத்தவேண்டும்., * சமைத்த உணவினை இலையான், தூசிபடியாதபடி பொருத்தமான மூடியினால் மூடிவைக்கப்படல்வேண்டும். கூரைப்பகுதிகளுக்கு தூசுதடுப்புத்தகடு (சீலிங்) அடிக்கப்பட்டிருத்தல்வேண்டும். கண்ணாடி உணவுப் பண்ட காட்சிப்பெட்டிகள் முழுமையாக மூடக்கூடியவையாக இருத்தல்வேண்டும்.,* சமையல்அறை புகைபோக்கி உடையதாக இருத்தல்வேண்டும்.,*.நிலைய நடவடிக்கைகளுக்கு புறம்பான பொருட்கள் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தி இருத்தல்வேண்டும். நிலையத்தை பணியாளர்கள் தங்குமிடமாக பாவித்தல் கூடாது. களஞ்சியஅறை அல்லது பிரிவு தனியாக இருத்தல் வேண்டும்.* நிலையவளவினுள் எவ்வித வளர்ப்பு பிராணிகளோ,பறவைகளோ , எலிகளோ அல்லது நுளம்புகள், இலையான்களின் பெருக்கஇடமோ வேறு நோயைப்பரப்பும் பூச்சிகளோ இருக்கலாகாது*நிலையத்தின் பணியாளர்கள் தொற்றுநோய்களால் பாதிக்கப்படாதவர்களாக இருப்பதுடன், தற்சுகாதாரத்தைப் பேணுதல்வேண்டும். இவர்கள் கடமை நேரத்தில் புகைத்தல், வெற்றிலை போடுதல், மது அருந்துதல் ஆகாது., * நிலையத்திலோ, வளவிலோ புதிதாக கட்டடம் அமைத்தல் பெரும்படியாக புதிய உணவுவகை தயாரிப்பு அல்லது விற்பனை நடவடிக்கை மேற்கொள்வதாயின் முன் அனுமதிபெற்றிருத்தல்வேண்டும்.

*சிற்றுண்டி வழங்கும்போது மக்கள் கேட்கும் அளவில் மட்டும் வழங்குதல்வேண்டும்., *உணவுதயாரித்தல், பரிமாறுதல் என்பன சுகாதாரமான முறையில் இருத்தல்வேண்டும். பரிமாறுவதற்கு சுத்தமான தட்டுகள் பயன்படுத்தப்படுவதுடன் இடுக்கிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். (வெற்றுக்கைகளால் கையாள்தல் ஆகாது),*பரிமாறுபவர்கள்மேலங்கிகள், தலைக் காப்பு வாய், மூக்கு, காப்புத்துணி ஆகியவை அணிதல் வேண்டும். உணவகத்தில் கடமையாற்றுபவர்கள் குறைந்தது ஆறுமாதத்திற்கு ஒருமுறை சுகாதார வைத்திய அதிகாரியினால் மருத்துவபரிசோதனைக்கு உட்பட்டு சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும்.,* சமையல்பகுதி திறந்த வெளிப் பகுதியுடன் எந்தவிதத்திலும் தொடர்புபடல்ஆகாது. * பொதி செய்யப்பட்ட உணவுகள் உரிய தகவல் அட்டையை கொண்டிருத்தல்வேண்டும். காலாவதியான பொருட்கள், மனிதப் பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை செய்தல் லாகாது.,*தங்கள் நிலையத்தை சுகாதாரமாக பேணுவதற்கு ஏதாவது இடையூறுகள் இருப்பின் சுகாதாரவைத்திய அதிகாரிக்கு அல்லது தமிழீழ சுகாதார சேவைகளின் மாவட்டப்பொறுப்பாளருக்கு தெரியப்படுத்தல்வேண்டும்., *சுகாதாரப்ரிசோதகர் குழு தங்கள் நிலையத்தை எவ்வேளைகளிலும் தரிசிக்கலாம். அவர்களது ஆலோசனைகள் பின்பற்றப்படவேண்டும். எந்தவொருநிலையத்தில் இருந்தும் அந்நிலையம் சார்பாக எவரும் ஆய்வாளர்களின் கடமைக்கு இடையூறுஏற்படுத்தின் அவ்விடையூறுகளின் ஒட்டுமொத்தமான பொறுப்பும் அந்நிலைய உரிமையாளரைச்சாரும்.,* எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி ஒழுங்கு விதிகள் மீறப்படின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். (19)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–கிளிநொச்சி

வ.இல:-364/04
தன்மை:-பணம்,
பெறுமதி:-500000/=
வழக்காளி
கோவிந்தராசா சிறிஸ்கந்தராசா,
203,கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

எதிராளி
எதிர்:- நல்லையா வீரசிங்கம்,
மதுஜா ரேடஸ்,
யாழ்.வீதி,
சாவகச்சேரி.

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிக்கு!

மேற்படி வழக்கில் உமக்கு எதிராக வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், உமக்கு அழைப்புக்கட்டளை சேர்க்கப்பட்ட பொழுதும் நீர் குறித்த கட்டளையை ஏற்று, நீதிமன்றில் தோன்றவில்லை, இதனால் இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில் நீரோ அல்லது உமது சார்பில் அக்கறையுடையவரோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் உமக்கு எதிராக ஒருமுகவிளக்கம் நடாத்தி, தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி, இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு....04.... மாதத்,29 திகதி
"மன்றின் கட்டளைப்படி"

வழக்காளி சட்டவாளர்,
திரு.தா.இ.குலசங்கர்,
இரத்தினபுரம்,வீதி,
கிளிநொச்சி.

உபபதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

(சி.11830)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### நடத்துநர் நேர்காணல்

தமிழீழப் போக்குவரவுக்கழகத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்காணல் 02.05.2005 ஆம் நாள் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 2.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள த.போ.க நடுவப்பணிமனையில் நடைபெறும்.

இப்பணிக்கு வருகை தருபவர்கள் தங்கள் கல்விச் சான்றிதழ் அகவையினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11829)

## முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ/து

## சமாசப் பார ஊர்தி விற்பனை

சமாசத்திற்குச் சொந்தமான 68–4699 இல. பார ஊர்தி பொதுக்கேள்வி மூலம் விற்பனை செய்யப்பட விருக்கிறது. அதனைக் கொள்வனவு செய்யவிரும்புவோர் சமாசத்தால் விநியோகிக்கப்படும் கேள்வி விண்ணப் பத்தால் தங்களது விண்ணப்பங்களை 14.05.2005 சனிக்கிழமை ஒரு மணிக்கு முன்பதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ கிடைக்கக் கூடியவாறு "தலைவர், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு "என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். இதற்கான விண்ணப்பங்கள் மீளளிக்கக் கூடிய ரூபா 1000 உம் மீளளிக்க முடியாத தொகை ரூபா 100 செலுத்துதல் வேண்டும்.

### நிபந்தனைகள்

01 ஒருவர் எத்தனை கேள்விகளுக்கும் அனுப்பலாம்.

02 மதிப்பிடப்பட்ட விற்பனை விலைக்குக் குறைந்த கேள்விகளைக் காரணம் காட்டாது நிராகரிப்பது சமாசத்தின் இயக்குநர் சபைக்குரியது.

03 திருப்தியான வகையில் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து அவற்றை நிராகரிக்கும் உரிமை சமாசத்தின் இயக்குநர் சபைக்குரியது.

04 சமாச அலுவலக நேரத்தில் விற்பனைக்குரிய வாகனத்தைப் பொதுமுகாமையாளரின் அனுமதியைப் பெற்று பார்வையிடலாம்.

அ. மரியராசா,
தலைவர்,
மு.க தொ.கூ.ச.சமாசம்,
முல்லைத்தீவு.

(சி.11851)

## மௌவல் வேளாண் வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது

## Mouval Agro Power (PVT) Limited

## பணிநிலை வெற்றிடம்

மௌவல் வேளாண்வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது நிறுவனத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன.

**01. பணிநிலை** :- **பண்ணை முகாமையாளர் (தரம் -03)**
Farm Manager (Grade -03)

*தகைமை* :- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக இருப்பதுடன்,பண்ணை முகாமைத் துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல்வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்வி நிறுவனமொன் றின் பொருத்தமான கற்கைநெறியினைப் பூர்த்தி செய்திருப்ப துடன், பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது ஐந்து (05) ஆண்டு கள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

*அகவை* :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம* :- $\frac{8,000 - 12,000}{200 \times 20} + 4,000$

**02. பணிநிலை** :- **பண்ணை மேற்பார்வையாளர் (தரம் -03)**
Farm SuPervisor (Grade -03)

*தகைமை* :- பண்ணை மேற்பார்வைப் பணியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவு உடையவராக இருக்கவேண்டும்.

*அகவை* :- 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம* :- $\frac{6,000 - 9,000}{150 \times 20} + 2,000$

**03. பணிநிலை** :- **பயிற்செய்கை அலுவலர் (பயிலுநர்)**
Cultivation Officer (Trainee)

*தகைமை* :- க.பொ.த உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் 03 பாடங்களில் சித்தி பெற்றவராக இருத்தல்வேண்டும்.

*அகவை* :- 19 - 25

*பயிலுநர் காலக்கட்டணம்* :- உரூபா 5,000/=

*பயிலுநர்காலம்* :- 06 மாதங்கள்

**04. பணிநிலை** :- **ஓட்டுநர் (தரம் - 03)**
Driver (Grade -03)

*தகைமை* :- 10 ஆம் தரம் சித்தியடைந்தவராகவும் ஊர்தி ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் (A.D வகுப்பு) உடையவராகவும் இருத்தல்வேண்டும் .

*அகவை* :- 25 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

*மாதாந்த ஊதியம* :- $\frac{4,960 - 7,560}{130 \times 20} + 2,000$

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளிற்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் கிளிநொச்சியில் அமைந்துள்ள **மௌவல் வேளாண்வலு (தனியார்) வரையறுக்கப்பட்டது.** (இலங்கை வங்கிக்கு அருகாமை) நிறுவனத்திற்கு 2005.05.02 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

**01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.**
**02. ஏனைய தகைமைகளையும், பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.**
**03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.**
**04. நற்சாட்சிப் பத்திரங்கள்.**

**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
**மௌவல் வேளாண் வலு (தனியார்)**
**வரையறுக்கப்பட்டது.**

Reg. No: N(PBS) 39914

(சி-11807)

# 'றோபோ' சத்திர சிகிச்சை வெற்றி இந்தியாவின் மருத்துவ துறை சாதனை

'றோபோ' மூலம் புற்று நோயாளிக்கு சத்திரசிகிச்சை செய்து இந்திய மருத்துவர் சாதனை படைத்துள்ளார்.

இந்தச் சாதனையை டில்லியிலுள்ள அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழக மருத்துவமனையைச் சேர்ந்த சிறுநீரக இயல்துறை பேராசிரியர் மருத்துவர் அசோக் ஹெமால் நிகழ்த்தியுள்ளார். அவர் இதுபற்றிக் கூறுகையில்;

62 வயதான ஆண் நோயாளி ஒருவருக்கு 'புரோஸ்பேட்' எனப்படும் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.

மேலை நாடுகளில் இந்தவகை புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து விடுகிறார் கள். இந்தியாவில் 90 சதவீதம் முற் றிய நிலையில்தான் கண்டறியப்படுகின்றன. 62 வயதான ஒரு நோயாளிக்கு ஆரம்ப நிலையிலேயே இந்தப் புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டது. அவருக்கு 'றோபோ' மூலம் (இயந்திரமனிதன்) அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய்யப் பட்டது.

அதன்படி மூன்று கைகள் உடைய 'றோபோ' இந்தச் சத்திரசிகிச்சையை நடத்தியது. இந்தச் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. 60 கிராம் புற்றுநோய் திசுக்களை 'றோபோ அகற்றியது.இந்தச் சத்திரசிகிச்சைக்கு 2 மணி நேரமும் 10 நிமிடமும் ஆனது என அந்த மருத்துவர் தெரிவித்தார்.

# கட்டாய வாக்களிப்பு மசோதா நிராகரிப்பு

இந்திய மாநில சட்டசபைகளுக்கும், பாராளுமன்றத்திற்கும் வாக்குபோடுவதைக்கட்டாயமாக்க வேண்டும் என்று ஒருதனி நபர் மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பாரதிய ஜனதா உறுப்பினர் பச்சிசிங் ராவாட் இந்த மசோதாவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தமசோதா நேற்று வாக்கெடுப்புக்கு வந்தது. அப்போது மசோதாவை தாக்கல் செய்தவர் சபையில் இல்லை. குரல் வாக்கு மூலம் இந்த மசோதா நிராகரிக்கப்பட்டது.

# தூர்தர்ஷனிற்கு சபாநாயகர் எச்சரிக்கை

கடந்த 25 ஆம் திகதி இந்திய பாராளுமன்றம் எந்த வித பணியையும் நிறைவேற்றாமல் ஒத்திவைக்கப் பட்டது என்று தூர்தர்ஷனில் செய்தி அறிவிக்கப்பட்டது. உண்மைக்குப் புறம்பான இந்தச் செய்தியை ஒளிபரப் பியதால், தூர்தர்ஷன் இயக்குநர் ஜெனரல் நவீன்குமார் தூர்தர்ஷனின் செய்திப்பகுதித் தலைவர் அமிதாப் சக்கரவர்த்தி ஆகியோரை நேற்று முன்தினம் இந்திய பாராளுமன்ற சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி அழைத்துப் பேசினார்.

அப்போது இருவரும் தவறிற்கு வருத்தம் தெரிவித்தனர். வருங் காலங்களில் இதுபோல் நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சபாநாயகர் எச்சரித்தார்.

# காங்கிரஸ் கொடியைப் பயன்படுத்த முரளிதரனுக்குத் தடை

காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட கேரள மூத்த காங்கிஸ் தலைவர் கருணாகரனின் மகன் முரளிதரன், புதிய கட்சி தொடங்க இருக்கிறார். அவர் காங்கிரஸ் கொடியைப் பயன்படுத்த தடை விதிக்கக் கோரி, திருச்சூர் நீதிமன்றில் காங்கிரஸ் வட்டார செயலாளர் உன்னி கிஷ்ணன் வழக்குத்தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சுனில் தாமஸ்,"கா ிரஸ் கொடியை முரளிதரன் பயன்படுத்தக் கூடாது என்று தீர்ப்பளித்தார்.


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின்மடியில் :- 20.12.1980

தாயகமடியில் :- 01.05.1999

2ஆம் லெப் காண்டீபன்/ ஈழவன்
அன்டெனிதாஸ் றொனால்ட்

சம்பவம்:-
முல்லைக்கடற்பரப்பில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது.

எம் பாச உறவே றொனால்ட்
தமிழ் மண்ணின் விடியலுக்காய்
தலைவனின் அணியில் ஒருவனானான்
கடலுடன் காவியமாகி
ஆறாண்டுகள் சென்றாலும்
ஆறாத்துயரில் உன் நினைவுகளுடன்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவுகள்.

முகவரி.
இல.324,
விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

இச்சம்பவத்தின்போது வீரச்சாவடைந்த ஏனைய 10 மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(6092)





கலியுக வரதனாம் திருநகர் (4 ஆம் யூனிற்)
சுப்பிரமணியர் தேவஸ்தானத்தில்

## நவக்கிரக சாந்தி விழா

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் சித்திரை மாதம்25 ஆம் நாள் (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்குறித்த தேவஸ்தானத்தில் விநாயக வழிபாடும்,ருத்திராபிஷேகமும், மூலமூர்திக்கு விசேட தீபாராதனையும், பூசைகளும், நவக்கிரக தேவர்களுக்கும் விஷேட ஓமம் அபிஷேகம்,பூசை செய்வதற்கு முருகன் திருவருள் கூடியிருப்பதால் சகல மக்களும், மாங்கல்ய தோசமுடையவர்களும், நோய்த்துன்பத்தால் பாதிப்புடையவர்களும், புத்திரதோஷமுடையவர்களும்,நாகதோசம், செவ்வாய்தோசம், குருதோசம், சனிதோசம் இருப்பவர்களுக்கும் பார்த்திப வருட தோசமான கார்த்திகை 2,3,4, ஆம் கால்,ரோகிணி,மிருகசீரிடம்,சித்திரை,சுவாதி விசாகம் 1,2,3 ஆம் கால்,அவிட்டம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் தவறாது சாந்தியில் கலந்துகொள்ளவும். எல்லா நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் கலந்துகொள்ளலாம்.

### குருமார் விபரம்

சிவாகம துரந்தரர் சிவஸ்ரீ சிவகந்ததாசக்குருக்கள்(திருநகர் முருகன்ஆலயம்),ஜோதிட மணி சிவஸ்ரீ கணேசபூரணக் குருக்கள் (மல்லாவி முருகன்ஆலயம்),சிவஸ்ரீ. ஞானப்பிரகாசக் குருக்கள் (மல்லாவி சிவன் ஆலயம்), சிவஸ்ரீ. வீரசிங்கக்குருக்கள் (சாளம்பன் விநாயகர் ஆலயம்), ஆலய குரு பிரம்மஸ்ரீ.க.கஜேந்திரசர்மா (திருநகர் முருகன் ஆலயம்)

உதவியாளர்:- சண்முகதாஸ்,சிவநாதன்.

குறிப்பு:- 4 நாட்களுக்கு முன் ஆலய குருவிடம் தொடர்பு கொள்க. அடியார்கள் பூமாலை, பால், இளநீர், நெய், சமித்துவகை,அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு வரவும். இதனால் மக்களுக்கு விவசாயம், பசுவிருத்தி,தனதானியம், செல்வம் செழித்துவரும்.

மங்கள வாத்தியம் நிமலன் குழுவினர். ஒளி,ஒலி அமைப்பு யோ.குகபாலன்

மக்கள் நலன் கருதும்
திருநகர் முருகன் ஆலய பரிபாலன சபையினர்.

(சி.11831)



## தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:**-உத்தியோக உதவியாளர் தரம் -03

**தகைமைகள்:** க.பொ.த.(சாதாரண தர)தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:**-3,670-5,070 / 70X20 +6,000

**அகவை எல்லை:**-19-25 ஆண்டுகள்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டு கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் ***"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை-உத்தியோக உதவியாளர் தரம்-03"*** எனக் குறிப்பிடப்பட்டு 2005.05.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு:- * முழுமையாக நிறைவு செய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.

* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (மனிதவள மேலாளர், ***மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.*** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி.11808)

# ஸ்மித், வில்லியர்ஸ் சதம் வலுவான நிலையில் தென்னாபிரிக்கா





மேற்கிந்திய தீவுகளின் அண்டி குவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான தென்னாபிரிக்க மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலாம் நாள் ஆட்டம் மழையினால் தடைப்பட்ட போது முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 214 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

அணித்தலைவர் ஸ்மித் 17 பவுண்டரிகளுடன் 106 ஓட்டங்களையும் இளம் வீரர் டி வில்லியர்ஸ் 12 பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடங்கலாக 103 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

நான்காவது போட்டியை எவ்வாறேனும் வென்றாக வேண்டிய நிலையில் புதிய சுழல் பந்து வீச்சாளரையும் வேகப்பந்து வீச்சாளரையும் அறிமுகப்படுத்திய போதிலும் அவர்களால் இவ்விரு இணைகளையும் 214 ஓட்டங்களில் பிரிக்க முடியாது போய்விட்டது.

எனினும் 58 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஸ்மித் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கும் சந்தர்ப்பத்தையும் வில்லியர்ஸ் விக்கெட்டை மறைத்த குற்றத்துக்கு (LBW) ஆட்டமிழக்கும் சந்தர்ப்பத்தையும் தக்கவைத்துக் கொண்டனர்.

இப்போட்டியில் முதுகு வலியால் ஓய்வில் சென்றுள்ள அன்ருநெல்லின் இடத்தைக் கடந்த மூன்று போட்டிகளையும் தவறவிட்ட ஷோன் பொலக் நிரப்புகிறார்.

# வெற்றிவாய்ப்பை விட்டுக் கொடுத்தார் மாலிக் மீது ஒழுக்காற்று நடவடிக்கை



போட்டியை விட்டுக் கொடுத்த விவகாரத்தில் சோயப் மாலிக் நடத்தை குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்டகுழுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அமைத்துள்ளது. அவருக்கு 14 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 20 : 20 கிரிக்கெட் போட்டி நடக்கிறது கடந்த வியாழனன்று சியால் கோட்ஸ்டாலியன் கராச்சி ஜீப்ரா அணிகள் மோதின சியால்கோட் அணியின் தலைவராக சோயப் மாலிக் இருந்தார். 176 ஓட்டங்களை வெற்றியாகக் கொண்டு ஆடிய சியால்கோட் அணி 16 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்து இருந்தது மீதம் 4 ஓவர் இருந்ததால் எளிதாக வெற்றி பெற்று இருக்கலாம். ஆனால் மந்தமாக துடுப்பட்டாம் செய்த மாலிக் போட்டியை வேண்டுமென்றே விட்டுக்கொடுத்தார். இவர் லாகூர் ஈகிள்ஸ் அணி அரையிறு திக்கு முன்னேறக் கூடாது என்பதற்காகவே விட்டுக் கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனை அறிந்த பாகிஸ்தான் கிரிக்கெட்சபை கராச்சி ஜீப்ராவை வெளியேற்றி லாகூர் அணிக்கே அரையிறுதி வாய்ப்பை கொடுத்தது இந்த விவகாரம்தான் இப்போது விசுவரூபம் எடுத்துள்ளது சோயப் மாலிக் நடத்தை குறித்து மூன்று பேர் கொண்டகுழு விசாரணை நடத்தும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் சலீம் அல்டாப் தெரிவித்தார்.



பிரேசில் வீரர் ரொமாரியோ, சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதை கௌரவிக்கும் விதமாக காட்சி கால்பந்து போட்டி மெக்ஸிகோவில் உள்ள குடாலஜாரா நகரில் வியாழக் கிழமை நடத்தப்பட்டது. அதில் ரொமாரியோ இடம் பெற்ற பிரேசில் அணியை எதிர்த்து மெக்ஸிக்கோ தேசிய அணி விளையாடியது. அதில் 4-3 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றி பெற்றது. அரங்கிலிருந்து வெளியேறும் போது ரசிகர்களது வாழ்த்தை ஏற்கிறார் ரொமாரியோ.

# தப்பான முறையில் தீர்ப்பு வழங்கினார் கால்பந்து நடுவருக்கு ஆயுள் காலத்தடை

ஊழல் குற்றச்சாட்டில் கால்பந்து நடுவருக்கு ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த கால்பந்து நடுவர் ராபர்ட் கோயிசர். இவர் ஜேர்மனி நாட்டின் முக்கியமான கால்பந்து போட்டியில் நடுவராக பணியாற்றினார். அப்போது சூதாட்ட கும்பல் இவரை கைக்குள் போட்டுக் கொண்டது. தவறாக தீர்ப்புச் சொல்வதற்கு 67ஆயிரம் யூரோ என்கிற ஜேர்மனிய பணம் லஞ்சமாக அவருக்கு வழங்கப்பட்டது அவரும் அதை எற்றுக்கொண்டு தப்புத் தப்பாக போட்டியில் தீர்ப்பு வழங்கினார். இதனால் வெற்றிபெற வேண்டிய அணி தோற்றது. தோற்க வேண்டிய அணி வெற்றிபெற்றது.

இந்தப்போட்டிக்குப் பின் நடுவர் கோயிசர் செய்த தவறு கண்டுபிடிக்கப்பட்டது. அவர் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டார் அவரை ஆயுள் காலத்துக்கு தடை விதித்து ஜேர்மன் கால்பந்து சங்கம் 2006 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டியை ஜேர்மனி நடத்துகிறது அதற்கு முன்னதாக இப்படி ஒரு நேர்மையான நடவடிக்கையை ஜேர்மனி கால்பந்து சங்கம் எடுத்ததின் மூலம் உலக அரங்கில் நற்பெயரை ஈட்டியுள்ளது.

# 3 நாடுகள் கிரிக்கெட் போட்டி இன்று: இந்திய அணியில் ஜடேஜா ஆடுகிறார்

அபுதாபியில் நடைபெற இருக்கும் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் அஜய் ஜடேஜா விளையாட நீதிமன்று அனுமதி அளித்துள்ளது.

கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கி ஓரங் கட்டப்பட்டவர் முன்னாள் துடுப்பாட்ட வீரர் அஜய் ஜடேஜா. அவர் மே முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதிவரை அபுதாபியில் நடைபெற இருக்கும் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்க தன்னை அனுமதிக்க வேண்டும் என்று ஜடேஜா ஒரு மனுவை டில்லி நீதிமன்றில் தாக்கல் செய்தார். அதை நீதிபதிகள் ஏற்று அவர் அபுதாபி போட்டியில் விளையாடலாம் என்று அனுமதி அளித்துள்ளனர்.

# எந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டாலும் எனது நிலையிலிருந்து இறங்கமாட்டேன்



வோர்ன்

இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி கிரிக்கெட் தொடரில் பங்கேற்கச் சென்றுள்ள அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் அண்மையில் நடைபெற்ற போட்டியொன்றின்போது எதிரணி வீரர்களை தாறுமாறாகப் பேசியதாகக் குற்றம் சுமத்தப்பட்டார். எனினும், இந்தக் குற்றச்சாட்டினால் தனது நிலையிலிருந்து தான் இறங்கிவிடமாட்டேன் என ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

நல்ல வீரர் என்றோ, அற்பமானவர் என்றோ, பரிகாசக்காரன் என்றோ கூறப்படுவது கிரிக்கெட்டில் நீண்ட காலமாக இருந்து வருவதாகும். ஏனைய வீரர்கள் தமது அணி வீரர்களைப் பார்த்து அவ்வாறு கூறுவதை நாம் எங்கும் முறையிடுவதில்லை என மக்களே கூறுகிறார்கள். நாம் கூறுவதை முரண்பாடாகக் கருதுவது அவர்கள் அமைதியற்ற சூழலில் இருப்பதினாலேயே. அது அவ்வாறே இருக்கட்டும். நாமும் வெற்றிக்காக கடினமாக ஆடுகிறோம். எம்மோடு ஆடுபவர்களும் அவ்வாறே. அவர்களால் முடியாதபோது நாம் வெற்றி பெறுகிறோம். இவ்வாறு தெரிவித்துள்ள ஷேன் வோர்ன், தமது நாட்டிலும் கவுண்டி போட்டிகளில் அவ்வாறே ஆடுவதாகவும், அது போன்றே இங்கும் நடந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இவரின் நடத்தை தொடரில் ஹம்சயர் அணித்தலைவர் கிறிஸ்ரி அடம்ஸ் குறை கூறியிருந்தார். இது தவறு என தனது சபைத் தலைவரிடம் வருத்தம் தெரிவித்ததாகவும் வோர்ன் கூறியுள்ளார்.



உய்பா கோப்பைக்கான கால்பந்து அரையிறுதிப் போட்டியில் அல்க்மார் அணி வீரர் கென்னத் பெரேசை (வலது) முன்னேற விடாமல் தடுக்கிறார். ஸ்போர்டிங் அணி வீரர் என்கர்ஹையர்.

# கவுண்டி கிரிக்கெட் போட்டி; நியூசிலாந்தின் அடம்ஸ் ஹட்ரிக் சாதனை



இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி கிரிக்கெட் போட்டித் தொடரில் எசக்ஸ் அணிக்கும், சோமசெட் அணிக்குமிடையில் நடைபெறும் இரண்டாவது லீக்கின் டெஸ்ட் போட்டியில் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் எசெக்ஸ் அணிக்காக விளையாடும் நியூசிலாந்தின் சகலதுறை வீரர் அன்ரு அடம்ஸ் ஹட்ரிக் சாதனை படைத்துள்ளார். அவர் தனது அடுத்தடுத்த மூன்று பந்துகளில் மைக்கல் பர்ண்ஸ், சனத் ஜெயசூரியா, ஜேம்ஸ் ஹில்ட்ரத் ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.


கடந்த வாரம் வோர்விக்சயர் அணிக்காக ஆடிய இங்கிலாந்து வீரர் ஸ்ரீவ் ஹார்மிசன் இச்சாதனையை நிகழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. ஒக்லாந்து வீரரான அடம்ஸ் ஒரு டெஸ்ட் போட்டியிலும், 2003 உலகக் கிண்ணம் உட்பட 32 சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். இது அவரது முதல் தரப் போட்டிகளில் முதலாவது சாதனையாகும். இப்போட்டியில் எசெக்ஸ் தனது முதலாவது இன்னிங்சில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 427 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்ட அதேவேளை, சோமசெட் அணி தனது முதல் இன்னிங்சில் 190 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 125 ஓட்டங்களையும் பெற்றுள்ளது. இதேவேளை, கவுண்டி போட்டித் தொடரில் வோர்செஸ்ட் சயா அணிக்கெதிராக லங்காசயர் அணி சார்பில் ஆடும் அன்ரு பிளின்டொப் 83 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார்.




பெண்களுக்கான உலக குத்துச் சண்டைப் போட்டி பிரான்சில் நடந்தது. இதில் பிரான்சைச் சேர்ந்த மிரியம் லாமெர் (வலது) உக்ரைனை சேர்ந்த எலீனா மோதிய காட்சி. இதில் லாமெர் வெற்றி பெற்று உலக சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.



## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-05-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## ஒடுக்கப்பட்டோர் நாள்!

மே-01 தொழிலாளர்களின் எழுச்சி நாள். உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் தாம் வென்றெடுத்த உரிமைகள் குறித்து பெருமிதம் கொள்வதும் தமது கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றுதிரண்டு கிளர்ந்தெழும்நாளும் இதுவாகும்.

ஆனால் இன்று மே நாள் என்பது தனியாக ஒடுக்கப்பட்ட தொழிலளார் வர்க்கத்தினரின் எழுச்சி நாளாக; உரிமைக்கான கோரிக்கைகளை முன்நிறுத்தும் நாளாக; மட்டும் இருப்பதில்லை. உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகரமான நாளாகவும் இது இன்றுள்ளது. பல்வேறு வகையிலும் ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைக்கான குரலை இந்நாளில் ஓங்கி ஒலித்து வருகின்றனர்.

இந்தவகையில்,தமிழ்மக்களும் இன்று ஒடுக்குமுறைக் கெதிராகவும்,தமது உரிமைக்காகவும் பெரும் குரல் எழுப்பத் தயாராகியுள்ளனர். அதாவது தமிழர் தாயகமெங்கும் மேதினப் பேரணிகளை நடத்த பொது அமைப்புக்கள் பெரியளவிலான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

வருடாவருடம் மே நாட்கள் வருகின்றன. ஒவ்வொரு வருடத்திலும் மக்கள் தமது உரிமைக்கான கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் பேரணிகளை நடாத்தியே வருகின்றனர். ஆனால் மக்களின் இக் கோரிக்கைகள் ஆளும் வர்க்கங்களினால் கருத்திற்கொள்ளப் படுகின்றனவா? மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படு கின்றனவா? அவ்வாறு இல்லையெனின் ஏன் இந்த எழுச்சிநாள் நிகழ்வுகள்?

அத்தகைய கேள்வியின் மத்தியிலும் மே நாட்களை எழுச்சிகர மானவையாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலும் நடத்துதல் என்பது அவசியமானதே. ஏனெனில் மே நாளின் எழுச்சியானது மக்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பலிப்பினையும், மக்களின் கோரிக்கைகளையும் வெளிப்படுத்து பவையாகும். அதாவது மக்கள் உணர்வுகளை உலகம் அறிந்து கொள்ள இது அவசியமானதாகிறது.

ஆகையினால், இத்தகைய எழுச்சிக்கான நிகழ்வுகள் நடாத்தப்படாது போனால் மக்களின் உணர்வுகளும் வெளிப்படுத்தப் பட முடியாதவையாகிவிடும். எடுத்துக்காட்டாக இவ்வாண்டு மே நாளில் தமிழ்மக்களின் தேசியத்தலைமையைப் பலப்படுத்துவோம் என்ற அறைகூவலில், சுனாமிஅனர்த்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாமை, இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமை என்பன தொடர்பான தமிழ் மக்களின் உணர்வுகளை,உலகிற்கு புரியவைக்கத் தக்கவையாக இருக்கும். அதாவது சிறிலங்கா அரசாங்கம் இவற்றைப் புறந்தள்ளுதல் தமிழ் மக்களின் உணர்விற்கு மாறானவையென்பதை உறுதிப்படுத்துபவையாக இருக்கும்.

இத்தகைய வலியுறுத்தல்கள் இல்லாதுபோனால் இன்று ஒடுக்குமுறையாளர்கள் நடத்தும் மே நாள் கருப்பொருட்களே மக்களின் குரலாக ஏற்கப்பட்டதாகிவிடும். அதாவது அண்மைக் காலத்தில் மே நாள் நிகழ்வுகள் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி நாள் என்ற நிலை மாறி ஆட்சியாளர்களின் களியாட்ட விழாவாகவும், ஒடுக்குமுறையாளர்களின் கூச்சலுக்குரிய நாளாகவும் ஆகிவிடுவதுண்டு.

குறிப்பாக சிறிலங்காவின் ஆட்சியிலுள்ள சகல கட்சிகளும் மே நாள் நிகழ்வுகளை நடத்துவது வழமையானது. அதாவது ஒடுக்குமுறையாளர்களே தொழிலாளருக்குக் கூச்சல்போடுவதும், பின்னர் களியாட்டங்களுடன் அவற்றை முடித்துக்கொள்வதும் வழமையாகும்.

இம்முறை சிறிலங்காவில் மற்றுமொரு விசேடம் என்னவெனில் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான கருப்பொருளில் ஜே.வி.பி மே நாள்நிகழ்வுகளை நடத்த முற்படுவதுதான். அதாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப்பணிகளுக்கு எதிரான செயற்பாட்டை முன்வைத்து மே நாள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளமைதான்.

சிங்கள அரசியல் கட்சிகள் இதுவரையில் மே நாள் நிகழ்வுகள் பலவற்றை நடத்தியிருப்பினும் ஜே.வி.பி தற்பொழுது கையில் எடுத்துள்ள கருப்பொருளை ஒத்த கருப்பொருளில் மே நாள் நிகழ்வுகளை மேற்கொள்ளவில்லை. அதாவது மனிதாபிமான செயலுக்குமாறான ஒடுக்கு முறை சிந்தனையை கையில் எடுத்து மேநாள் நிகழ்வுகளை முன்னெடுத்ததில்லை. ஆனால் ஜே.வி.பி தற்பொழுது முன்னெடுத்துள்ள மே நாட்கள் நிகழ்வுகள் ஒடுக்கப்பட்ட மக்களின் நாளா அன்றி ஒடுக்குபவர்களின் நாளா என்ற கேள்வியை எழவைக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் மே நாள் ஒடுக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் நாள் என்பதை வெளிப்படுத்துவதோடு ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியானது அச்சுறுத்தலுக்கும். அடக்கு முறைக்கும் அடிபணிந்து விடாது என்பதை வலியுறுத்துவதுமான பெரும் பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. அதாவது தமிழ்மக்களின் உணர்வுகள் அடக்குமுறைகளுக்கும். சர்வதேசத்திற்கும் இம் மே நாளிலும் வெளிப்படுத்தப்படவேண்டியது மற்றுமொரு தடவை கட்டாயமாகின்றது.

# மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் ஊடகவியலாளருக்கு சிறிலங்கா கொலைக்களமே

## அனைத்துலக த.கூட்டமைப்பு சிவராமின் கொலைக்குக் கண்டனம்

மூத்த ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் அவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமையை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. சிவராமினை இழந்து தவிக்கும் அவரது துணைவியார் மற்றும் பிள்ளைகளின் துயரங்களில் அனைத்துலகத் தமிழர்கள் சார்பில் தமிழர் கூட்டமைப்பும் பங்கேற்கின்றது.

இது தொடர்பாக அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்தப்படுகொலையானது சிறிலங்கா படைகளின் தீவிரமான கண்காணிப்புக்கள் நிறைந்த உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இடம்பெற்றுள்ளது. இதனால் முப்படைகளின் தளபதியாகிய சனாதிபதி சந்திரிகாவே இந்தப் படுகொலைகளுக்கு பொறுப்பாளியாக்கப்படல் வேண்டும். நிமலராஜன், நடேசன், குமார் பொன்னம்பலம், சந்திரநேரு போன்ற பல தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களும், மனித உரிமை செயற்பாட்டளாளர்களும் இவரின் ஆட்சிக் காலத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிவராம் வலுமிக்க இரு மொழிகளில் செயற்படும் மூத்த ஊடகவியலாளர். தமிழ்நெற் ஊடாக உலகளாவிய வாசகர்களைச் சென்றடைந்த அவர் டெய்லிமிரர் ஊடாக சிறிலங்காவின் ஆங்கில வாசகர்களையும், எண்ணற்ற வாராந்த, நாளாந்த ஊடகங்கள் ஊடாக தமிழ் பேசும் மக்களைச் சென்றடைந்தார். சர்வதேச மன்றுகளில் அவர் சிறிலங்கா தொடர்பான வெளிப்படையான விமர்சகனாகத் திகழ்ந்தார். ஆயினும் கருத்துச் சுதந்திரம் எனும் வரை முறைக்குள் நின்றவாறே செயற்பட்டு வந்தார்.

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் சிறிலங்காப் படைகளும், உளவுத்துறையும், துணைப்படைகளும் மேற்கொண்டு வந்த படுகொலைகள் தொடர்பாக சிறிலங்கா அரசைப் பகிரங்கமாக சிவராம் விமர்சித்து வந்தார். 2001 ஆம் ஆண்டு சிவராம் தாக்கப்பட்டு அவரது ஊடகப் பணிமனையும் சிறிலங்கா உளவுத்துறையினரால் தாக்கி சேதப்படுத்தப்பட்டதனால் கொழும்புக்கு தப்பிச்சென்று வாழ்ந்து வந்தார். அவர் தனது துணிச்சலான கருத்துக்களை வெளிப்படுத்திய போதெல்லாம் அரச படைகளின் அச்சுறுத்தலுக்குள்ளாகினார்.

2004 ஆம் ஆண்டு தனக்கு ஏற்பட்ட உயிராபத்துத் தொடர்பாக அனைத்துலக ரீதியான முறைப்பாட்டையும் செய்திருந்தார். அவரது சாவானது கிழக்கோ, மேற்கோ சிறிலங்காவானது மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஒரு கொலைக்களமே' என்பதை நிரூபித்துள்ளது. தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுத மேந்திய சிவராம், பின்னர் ஒரு முழுமையான ஊடகவியலாளனாக வாழ்ந்தார். அவர் தனது பேனாவை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக வலுவாக பாவித்து வந்தார். இன்று ஒரு மூத்த ஊடகவியலாளின் பேனா எதேச்சதிகாரிகளின் துப்பாக்கிகளால் அமைதியாக்கப்பட்டுள்ளது. இவ் வேளையில், அமைதியை விரும்பும் சர்வதேச நாடுகள் தமிழ் புத்திஜீவி கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை அழித்தொழிக்கும் சிறிலங்காவின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த உதவிடல் வேண்டும்.

## சிவராம் படுகொலையைக் கண்டித்து யாழ்.இல் பத்திரிகையாளர் போராட்டம்

பத்திரிகையாளர் சிவராம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் கண்டனப் போராட்டத்தை நேற்று நடத்தினார்கள்.

நண்பகல் 11.00 மணி முதல்11.30 வரை இப்போராட்டம் யாழ்.பேருந்து நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பல்வேறு சுலோகங்களைத் தாங்கி நின்றதுடன் அரசிற்கும் கைக்கூலிகளாகச் செயற்பட்டு வரும் சக்திகளுக்கும் எதிராக பல்வேறு கோசங்களையும் எழுப்பினர்.

ஊடகவியலாளர்கள் நடத்திய போராட்டம் காரணமாக வீதிப் போக்குவரத்துக்களும் சில நிமிடங்கள் பாதிப்படைந்தன. வீதிப்போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்கள்நடத்திய போராட்ட இடத்திற்கு சிறிலங்காப் பொலிசார் சமுகம் கொடுத்து போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டனர். நேற்றைய் கண்டனப் போராட்டத்தில் ஊடகவியலாளருடன் இணைந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன், மாவைசேனாதிராஜா, சிவாஜிலிங்கம் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டார்கள்.

## தே.எ. பேரவையின் ஒழுங்கு படுத்தலில் முள்ளியவளை, மல்லாவியில் "மே" நாள் நிகழ்வு

முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் மே தின நிகழ்வுகள் முள்ளியவளையில் இடம்பெறவுள்ளது. தண்ணிரூற்று மூன்றாம் கட்டையில் இருந்து ஆரம்பமாகும். இவ் ஊர்வலமானது முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்து அங்கு பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளதுடன், பல்வேறு அமைப்புக்களால் பல்வேறு விதமாக அமைக்கப்பட்ட ஊர்திகள் ஊர்வலத்தில் பங்கு கொள்கின்றன. இவ்வாறு கலந்து கொள்ளும் ஊர்திகளில் முதல் மூன்று இடங்களைப்பெறும் ஊர்திகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், கலந்து கொள்ளும் சகல ஊர்திகளுக்கும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்த மேதின நிகழ்வில் அனைத்துத் தொழிலாளர்களையும், கலந்துகொள்ளுமாறு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் அறைகூவல் விடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லை மாவட்டத்தின் மேற்குப் பிரதேசமாகிய மாங்குளம், பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் அரச அரசசார்பற்ற பொதுஅமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொள்ளும் மேதினப் பேரணி மல்லாவி முதலாம் யுனிற் சந்தியில் இருந்து பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி வண்ணன் விளையாட்டு கழக மைதானத்தை வந்தடைந்ததும், அங்கு பொதுக் கூட்டமும், இடம்பெறவுள்ளது. இதில் மேற்படி பிரதேசங்களுக்குட்பட்ட அனைத்து அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு துணுக்காய்ப் பிரதேச தொழிற்சங்க அமைப்புக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (24,08)

# ஐ.தே.கட்சி கொழும்பு நகரசபை மைதானத்திலும் பொதுசன ஐ.முன்னணி காலிமுகத்திடலிலும்

## -"மே" நாள் கூட்டங்கள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இன்று கொழும்பிலும் பிற மாவட்டங்களிலும், ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தவுள்ளன.

இவற்றுள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் கூட்டங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. நாடு முன்னணியில் எனும் தொனிப்பொருளின் கீழ் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கவுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி என்பன இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளன. இவர்களின் ஊர்வலம் கெம்பல் மைதானத்திலிருந்து ஆரம்பமாகும். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவர்களின் ஊர்வலம் சுகதாஸ விளையாட்டரங்கிற்கு அருகாமையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

## எரிக்,யசூசி அகாஸி அடுத்தவாரம் கொழும்பு வருவர்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்படவிருக்கும் உத்தேச பொதுக்கட்டமைப்புப் பற்றிய தற்போதைய நிலவரம் குறித்து ஆராய்வதற்காக நோர்வே மற்றும் ஜப்பான் நாட்டு விசேட பிரதிநிதிகளான எரிக் சூல்ஹெய்ம் மற்றும் யசூசி அகாஸி ஆகியோர் அடுத்தவார இறுதியில் இலங்கை வரவுள்ளனர்.

இம் மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு குறித்து உடன்பாட்டிற்கு இரு சாராரையும் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவதற்காக இவ் விசேட பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன சூல்ஹெய்ம் இம் மாதம் 6 ஆம் திகதியும் யசூசி அகாஸி இம் மாதம் 8 ஆம் திகதியும் வரவுள்ளனர்.

# வடக்கு கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவ இந்தியா உறுதி பூண்டுள்ளது

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர்

(திருகோணமலை)

இலங்கை நாட்டின் வடகிழக்கு மக்களின் நலன்களும் அவர்கள் நலமாக வாழ வேண்டும் என்பதும் இந்தியாவின் இதயத்தில் பதிந்துள்ளது. வடக்கு கிழக்கின் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத்துறையின் அபிவிருத்திக்கு உதவுவதற்கு இந்தியா உறுதி பூண்டுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் ஸியாம் சரண் தெரிவித்தார்.

திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஒரு தொகுதி கல்விசார் அபிவிருத்தி நடவடிக்கைக்கு உதவும் உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வைத்துப் பேசும் போது ஷியாம் சரண் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) காலை 11.30 மணியளவில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் வி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளருடன் இலங்கைக்கான இந்தியத் தூதர் நிருபமராவ் இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச்செயலர் திருமதி நீலன் டியோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் மேலும் கூறியதாவது, "கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை ஆளுகையின் சக்தியை வழிநடத்தி வருகிறது. ஆகவே திருகோணமலைக்கு வந்திருப்பது அறிவுசார்ந்த அனுபவத்துடன் மிகுந்த ஆர்வத்தையும் தந்துள்ளது. இன்று திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இந்திய அரசாங்கத்தினர் அன்பளிப்பாக வழங்கப்படும் உபகரணங்கள் இக்கல்லூரியில் புதிய பயிற்சி நெறிகளைத் தொடங்கவும் இருக்கும் பயிற்சி நெறிகளை தரமுயர்த்தவும் உதவும் என்று அறிகின்றேன்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பொருளாதாரப் மற்றும் தொழில் நுட்பத் துறை அபிவிருத்தியூடாக உதவுவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது. தற்போது வழங்கப்படும் உதவியும் சிறிலங்கா-இந்தியா எண்ணெய்க் கூட்டுத்தாபன அமைப்பு திருகோணமலையில் அமைந்திருப்பது இந்தியா, இலங்கையின் வடக்கு கிழக்குடன் வைத்திருக்கும் நெருங்கிய தொடர்பின் அடையாளம் ஆகும். இரு நாடுகளின் கடற்படைகளுக்கும் முக்கிய நெருங்கிய இணைப் பாக திருகோணமலை விளங்குகின்றது.

இலங்கையின் ஐக்கியம் இறைமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு பேணப்பட வேண்டும் என்பதிலும் இலங்கையின் சகல பிரிவு மக்களின் சமாதான வாழ்விலும் இந்தியா உறுதியாகவுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் செயலாளர் ஷியாம்சரண் தெரிவித்தார். (25)

# பாணந்துறை புகையிரத நிலைய அதிபரை இடைநிறுத்துமாறு உத்தரவு

(கொழும்பு)

பாணந்துறை புகையிரத நிலைய அதிபரின் சேவையை இடைநிறுத்துமாறு போக்குவரத்து அமைச்சர் புகையிரதத் திணைக்களம் பொது முகாமையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். பாணந்துறை புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் காலை பிரயாணச் சீட்டுக்களை விநியோகிக்கவென அதிகாரி ஒருவரை நியமிக்க புகையிரத நிலைய அதிபர் தவறியதே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரயாணச் சீட்டுக்களை வழங்குவதற்கு அதிகாரிகள் எவரும் இல்லாத காரணத்தால் பிரயாணிகள் பெருமளவு கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.

எனவே பாணந்துறை புகையிரத நிலைய அதிபர் தனது கடமை சம்பந்தமான பொறுப்புக்களை உதாசீனம் செய்துள்ளார். என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

# இரு கருணா குழு உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆயுதங்களுடன் பிரயாணம் செய்த கருணா குழு உறுப்பினர்கள் இருவரை சிறிலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றை மறித்து சோதனையிட்ட போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் மற்றும் இரு துப்பாக்கிகள், 16 தோட்டாக்கள் என்பவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் பிரயாணம் செய்த வாகனம் களவாடப்பட்டதென்றும் இரு சந்தேக நபர்களும் மட்டக்களப்பு அக்கரைப்பற்றுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் செல்வாக்கால் ஆசிரியருக்கு பதவி உயர்வு வழங்குவதைநிறுத்துக!

## – ஆசிரியர் சேவைச் சங்கம் அரசிற்குக்கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் செல்வாக்கினால் ஆசிரியர்கள் பதவியுயர்வு பெறுவதை அரசு தடுத்துநிறுத்தாவிட்டால் தாம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வோம் என இலங்கை ஆசிரிய சேவை சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் "ஜலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கடந்த வியாழனன்று கல்வியமைச்சுக்கும் பொறுப்பாக இருக்கும் சனாதிபதி சந்திரிகா சந்திப்பொன்றின் போது இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சு மேலதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும் எனத் தெரிவித்தார்.

எனினும் கல்வியமைச்சு அதிகாரிகள் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அதன் பின்னரும் நானூறு தகுதியற்ற ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கின் மூலம் அதிபர்களாகவும் பணிப்பாளர்களாகவும் மற்றும் உயர் அதிகாரிகளாகவும் நியமிக்கபட்டிருப்பதாக பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதே போன்று கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்த பின் 900 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் கடந்த ஐ.தே.முன்னணி அரசு காலத்திலும் ஏழாயிரம் தகுதியற்ற ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் இப்போதும் நாலாயிரம் பேருக்கு உயர் பதவி வழங்கப்பபட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இவர்கள் தகுதியற்றிருந்தும் அரசியல் செல்வாக்கினால் பதவியுயர்வு பெற்றிருப்பதால் தேவையான தகுதியுள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அரசு பதவிக்கு வந்தவுடன் இதனை நிறுத்துவதாகவும் வாக்களித்த போதும் கடந்த ஐ.தே முன்னணியின் செயற்பாட்டையே கடைப்பிடிப்பதாகவும் அவர் சுட்டி [illegible]ட்டியுள்ளார்.

# எஸ்.பி யின் விடுதலை குறித்து மிலிந்த சனாதிபதியுடன் பேச முடிவு

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடகால சிறைத்தண்டனையைப் பெற்று தற்போது சிறையில் இருக்கும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்வது தொடர்பாக சிறிலங்கா சனாதிபதியுடன் உரையாடுவதற்காக கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட அடுத்த வாரம் சனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

எஸ்.பி.திஸாநாயக்க குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே மொறகொடவின் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. இவ் விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பீடம் பல தடவைகள் விரிவாக கலந்தாலோசனை செய்தது. இதன்போதே எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலை தொடர்பாக சனாதிபதியிடமிருந்து சாதகமான ஒரு பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக மிலிந்த மொறகொட சனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கோரிக்கை ஐக்கிய தேசியக் கட்சி தலைவரிடம் முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எஸ்.பி.திஸாநாயக்கவுடனும் திருமதி தமரா திஸாநாயக்கவுடனும் மிலிந்த மொறகொடவுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் மிலிந்த மொறகொடவை சனாதிபதியுடன் பேசுமாறு கூறியுள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்க இதுவரை தனது தண்டனை காலத்தில் 5 மாத காலத்தை சிறையில் கழித்துள்ளார்.

### இந்திய....

பொறுப்பான கடற்படைத் தளபதியுடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின் கண்டிக்குச் செல்லும் அவர் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு நான்கு அம்பியுலன்ஸ் வண்டிகளை வழங்குவார் எனவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது

### சிவராமின்....

தின் மீது செய்யப்பட்ட கொடூரமான தாக்குதல் என சுட்டிக்காட்டிய அவர் சுதந்திர ஊடகங்களை அழிப்பதற்கு எவராவது முயல்வரானால் அது ஒரு முட்டாள் தனமான செயல் எனவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாகவும், தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களாக வடக்குக் கிழக்கு பிரச்சினை சுனாமி நிவாரணங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த செய்திகள் அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருப்பதாக அவர் தெரிவித்தார். (32)

### தமிழர்....

நடைமுறைப்படுத்தாது தொடர்ந்து இழுத்தடித்து வரும் சிறிலங்கா அரசாங்கத்தைக் கண்டித்தல், ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டியடித்து எமது மண்ணில் மீண்டும் நாம் குடியேறுவதற்கு சபதம் எடுத்தல் போன்றவற்றை தொனிப் பொருளாகக் கொண்டு இந்த "மே" நாள் மிக எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ளது. எல்லோரும் ஒன்றுபட்டு எழுச்சி கொண்டு சபதமெடுக்கும் நாளாகவும் இந்த "மே" நாள் அமைகிறது.

### இந்திய வெளியுறவு...

அமைச்சின் செயலாளர் ஷியாம் சரண் வருவதாக இருந்தது. ஆரம்பத்தில் கல்லூரி வளவினுள் பிரதான வாசல் பக்கமாக நின்று கொண்டிருந்த மாணவர்கள் பின்னர் கல்லூரி வளவிலிருந்து வெளியேறி வீதிக்கு வந்தனர். வீதி ஓரமாக கல்லூரி வாசல் முன்பாக நின்று கொண்டிருந்த மாணவரைப் பொலிசார் கல்லூரி வாசலிலிருந்து மிகுந்துபுர பக்க[illegible] செல்லும்படி பணித்தனர்.

இந்திய வெளியுற[illegible] அமைச்[illegible]செயலர் கல்லூரியி[illegible]பிரதான வாசலை வந்தடைந்தபோது ஒரு மாணவர் கூட நிகழ்வு நடந்த கல்லூரி மண்டபத்தில் காணப்படவில்லை.

விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினரை நிகழ்வுக்கு அழைத்திருக்க வேண்டும். இன்று சமாதான முயற்சி, கடற்கோள் நிவாரணம் தொடர்பான பொதுக் கட்டமைப்பு ஆகிய முயற்சிகளில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதில் தீவிரம் மேற்கொள்ளப்படும் தருணத்தில் மாவட்ட அரசியல்துறையினரை கல்லூரியில் இந்தியவெளியுறவு அமைச்சுச் செயலாளர் பங்கு பற்றிய நிகழ்வுக்கு அழைக்காதது கண்டிக்கத்தக்கது என்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர். செயலாளர் ஷியாம் சரண் வருவதற்கு பலமணி நேரம் முன்பதாக கல்லூரி அமைந்துள்ள பிரதேசத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. மாணவர் பகிஷ்கரிப்பின் போது சிரேஷ்ட பொலிஸ் அதிபர் எச்.என்.அஹறங்கல அந்த இடத்திலிருந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்தார். (25)

### தேசியத்....

அவர்கள் எளிமையும், நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர். நிறைந்த அறிவு படைத்தவர். எழுத்துத்துறையில் மிகுந்த விற்பன்னர். உலக அரங்கில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர் இவருக்கு அறிமுகமே தேவையில்லை.

இவர் த்னது எழுத்துக்களால் தமிழரின் தேசியப் பிரச்சினையை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார். சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும், இராஜதந்திர சமூகத்திற்கும் மிகச் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தினார். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்று கொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக் கூறினார். ஆபத்துக்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர் கொண்டபோதும், அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்து நின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக எம்மக்களுக்கு ஓயாது அரசியல் விழிப்புணர்வூட்டி தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தினார். அன்னார் ஆற்றிய அரும்பணி என்றுமே போற்றுதற்குரியது.

தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியைக் கௌரவிக்கும் முக மாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு எனத் தொவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது